කාර්යසාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

Performance Report

2021



බුද්ධශාසන, ආගමික සහ සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය

புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

Ministry of Buddhasasana, Religious & Cultural Affairs



செயலாற்றுகை அறிக்கை

2021

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

இல.135, ஸ்ரீமத் அநாகரிக தர்மபால மாவத்தை

கொழும்பு – 07.

தொலைபேசி :011 -2307694
011 - 2307674

தொலைநகல் :011 -2307688
011 - 2300513

மின்னஞ்சல் : info@mbs.gov.lk

இணையதளம் : http://www.mbs.gov.lk

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

உள்ளடக்கம்

		பக்க இல.
<u>புத்தசாசன பிரிவு மற்றும் சமய அலுவல்கள் பிரிவு</u>		
அத்தியாயம் 01	நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	01 – 06
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	07 – 24
அத்தியாயம் 03	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	25 – 67
அத்தியாயம் 04	செயலாற்றுகை சுட்டிகள்	68
அத்தியாயம் 05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	69 – 70
அத்தியாயம் 06	மனித வள விபரம்	71 – 72
அத்தியாயம் 07	இணக்க அறிக்கை	73 – 82
<u>கலாச்சார அலுவல்கள் பிரிவு</u>		
அத்தியாயம் 01	நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	83 – 91
அத்தியாயம் 02	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	92- 105
அத்தியாயம் 03	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	106-130
அத்தியாயம் 04	செயலாற்றுகை சுட்டிகள்	131-132
அத்தியாயம் 05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	133-136
அத்தியாயம் 06	முனித வள விபரம்	137-139
அத்தியாயம் 07	இணக்க அறிக்கை	140-152
பொது செயலாற்றுகை சபை வருடாந்த அறிக்கை		153-163

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டவாறு, புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதும் அதனை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின்முன் னுரிமையளிக்கப்பட்ட பொறுப்பாக இருந்துள்ளது. அதற்கிணங்க, அரசாங்கமானது ஒவ்வொரு சமயத்தினையும் சமமாகக் கருதுவது, அனைத்து மதங்களையும் சார்ந்த மக்களுடனும் சகல இனக்குழுக்களுடனும் சக வாழ்வுடன் இணைந்து வாழும் வகையில் மிகச் சிறந்த ஒழுக்கநெறி சார்ந்த சமூகமொன்றினைக் கட்டியழுப்புதல் மற்றும் புத்த மதத்தின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட நிலையான பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்பும் பின்னணியினை ஏற்படுத்துதல் என்பனவற்றினை முன்னெடுப்பது அரசாங்கத்தின் இயல்பான கடமையாகவே கருதப்படுகின்றது. மேலும், இலங்கையின் கலைகள மற்றும் பண்பாடு என்பவற்றினை முன்னேற்றுவதற்கான பாதுகாப்பு மற்றும் வளர்த்தெடுத்தல் நடவடிக்கைளினை முன்னெடுப்பது அமைச்சின் கடமைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

இந்த அமைச்சின் நோக்கங்கள் அரசாங்கத்தின் நாட்டினைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின்படி அடையப் பெறவேண்டியுள்ளன. இது புனிதப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் தேசியகொள்கைகளின் அடிப்படையில் சமயங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் சகவாழ்வினை ஏற்படுத்துதல் அல்லது சமயகுரவர்களின் முன்னேற்றத்தினை அதிகரித்தல் தொடர்பான கருத்திட்டங்களை உள்ளடக்குகின்றது. அவ்வாறே, தேவையான கலை சாரந்த விடயங்களினை வளர்த்தெடுப்பதற்கும் ஆன்மீக ரீதியாக மேம்பட்ட பிரஜைகளை உருவாக்குவதற்குத் தேவையான கலாச்சார விடயங்களினை வளர்த்தெடுப்பதற்கும் பாதுகாப்பதற்குமான பல்வேறு கருத்திட்டங்களையும் அமுல்படுத்திவருகின்றது.

புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவானது பௌத்த, கிறீஸ்தவ, இந்து, இஸ்லாமிய சமயங்களுடனும் மற்றும் இலங்கையில் தொழிற்படும் ஏனைய சமயம் சார்ந்த அமைப்புக்களுடனும் இணைந்து பணியாற்றி வருவதுடன் கலாச்சாரஅலுவல்கள் பிரிவானது நாட்டின் கலாச்சார விடயங்கள் மற்றும் தொல்பொருள் மரபுரிமைகள் சார்பில் தொழிற்பட்டு வருவதுடன் திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் கலை நிகழ்வுகளை நடாத்துதல் போன்றவற்றினை வளர்த்தெடுப்பதிலும் பாதுகாப்பதிலும் மற்றும் அரச ஆவணங்களைப் பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது.

அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டினுள் அமைச்சின் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவு மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரிவு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்த செயலாற்றுகை அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2 நோக்கு / செயற்பணி / நோக்கம்

நோக்கு

“வலுவாதாரம் மிக்க அபிவிருத்தியடைந்த இலங்கையினை உருவாக்குதல்”

புத்தசாசன மற்றும் சமய பிரிவு

செயற்பணி

“இலங்கையின் கலாச்சாரத்தினைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பிரபல்யப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளினை முன்னெடுப்பதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், திரைப்படங்கள், நாடகங்கள் கோட்பாட்டு ரீதியான கலைகள் மற்றும் கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா மரபுரிகைள் மற்றும் அரச ஆவணங்கள் என்பவற்றினைப் பாதுகாத்தல், கலாச்சார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் வேறிடங்களுக்கு அவற்றினை நகர்த்திப் பாதுகாப்பளித்தல், புத்தசாசனத்தினால் முன்னுரிமை அளிக்கப்படும் அனைத்து சமயங்களினதும் போதனைகளின் அடிப்படையில் ஆகக்கூடிய மட்டத்தில் முலவளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அனைத்துத் தரப்புக்களிதும் பங்குபெறுதலுடன் சமய சகவாழ்வினை முழுமையாக விருத்தி செய்து முறையான, நெறிமுறை சார்ந்த மற்றும் ஆன்மீகவழியில் மேம்பட்ட சமூகமொன்றினை உருவாக்குதல்”.

நோக்கங்கள்

ஆன்மீக விழுமியங்கள் மற்றும் நல்லொழுக்கங்கள் நிறைந்த சகவாழ்வுடைய சமூகமொன்றினை உருவாக்கும் பொருட்டு இந்து, கிறீஸ்தவ மற்றும் இஸ்லாமிய சமயங்களுடன் சகவாழ்வினைப் பேணுவதும் பௌத்த சமயத்திற்கு முதன்மை இடம் வழங்கப்படுவதனை உறுதி செய்யும் நோக்கில் தொழிற்படும் இந்த அமைச்சுக்கு பின்வரும் நோக்கங்களும் உரித்தளிக்கப்பட்டுள்ளன.

- பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளையில் அதனைப் பாதுகாத்தலும் வளர்த்தெடுத்தலும்.

- ஒவ்வொரு சமயத்தினதும் உரிகைளினைப் பாதுகாத்தல் மற்றும் சமய ரீதியானதும் ஆன்மிக வழியிலுமான சமூகத்தினைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு இனக்குழுவும் பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் சகவாழ்வுடனும் வாழும் வகையிலான சமூகமொன்றினைத் தோற்றுவித்தல்.

    - தேரவடி புத்த சமயத்தினைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள பௌத்த துறவிகளுக்கு பௌத்த தத்துவங்கள் மற்றும் ஏனைய மொழிகள் என்பவற்றின் அறிவூட்டலுடன் கூடிய தேவையான வசதிகளினை எற்படுத்திக் கொடுத்தலும் ஏனைய சமயங்களின் குரவர்களுக்கும் அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளினை எடுத்தலும்.

- ஒவ்வொரு சமய ரீதியான நிறுவனங்களையும் கவனத்தில் கொண்டு ஆன்மீக மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த வாழ்வினை பொதுமக்களுக்கு நெறிப்படுத்துதலும் அவர்களின் சிறுபராயத்திலிருந்து ஒழுக்கநெறி சார்ந்தவர்களாக உருவாக்குதலும் பல்வேறு சமயங்களினூடாக உண்மையான சமயரீதியான அறிவினை மேம்படுத்துதலும்.

- சுமய விழுமியங்களின் அடிப்படையிலான பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான பின்னணியினைஉருவாக்குதல்.

- பொருளாதார ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் முன்னேற்றமடைந்த பிரஜைகளினை உருவாக்குதல்.

- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தெரவடி புத்தசமயத்தின் விரிவாக்குவதற்கான மையமாகத் தொழிற்படுதல்.

- புராதன பௌத்த மற்றும் தொல்பொருள் விழுமியங்களுடன் கூடிய பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளினை எடுத்தலும் அவற்றினை எதிர்காலத் தலைமுறைகளுக்குப் பரிசளித்தலும்.

1.3 பிரதான தொழிற்பாடுகள்

- இந்த அமைச்சின் நோக்கெல்லையின கீழ் வருகின்ற புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டசபைகள் என்பவை தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை வகுத்தலும் அவற்றினை அமுல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.

- பௌத்த மதத்தினை பாதுகாத்தல், வலுவூட்டுதல் மற்றும் மேம்படுத்தும் வகையில் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதலும் அவற்றினைக் கண்காணித்தலும்.

- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களினூடாக புத்தசாசனம் மற்றும் ஏனைய சமயங்களினைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதலும் நெறிப்படுத்துதலும்.

- அறநெறிப் பாடசாலைக் கல்வியினை மேம்படுத்துவதற்கான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- புனிதப் பிரதேசங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்

- தொல்பொருள் விழுமியங்களினைக் கொண்டுள்ள பிரதேசங்களைப் புனரமைப்புச் செய்தலும் பாதுகாத்தலும்.

- மேலத்தேய நாடுகளில் உண்மையான புத்தசமயத்தினைப் பரப்பும் பொருட்டு முறையாக கற்கின்ற, முறையாக புத்தமதக் கோட்பாடுகளினை பின்பற்றுகின்ற துறவிகளுக்கு கற்றறிந்த, ஒழுக்கநெறி முறைசார்ந்த தூதுக் குழுவினை உருவாக்குவதற்கான பின்னணியினை உருவாக்குதல்.

- அதிஉயர் தலைமைப்பீடத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுதல்

- நேபாளத்தில் அமைந்துள்ள லும்பினி புனிதப் பிரதேசத்தினை பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்.


- ஒவ்வொருவரும் தமது சமயக் கோட்பாடுகளினை பின்பற்றுவதற்கான சூழலினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- பல்வேறு நன்மைகளினை வழங்குவதாக உறுதியளிக்கின்ற ஏனைய சமயங்களுடனும் இணைந்து மக்களைப் பாதுகாத்தல்.

- சட்ட ரீதியற்ற முறையில் வணக்கதலங்கள் நிருமாணிப்படுவதனைத் தடுத்தல்.

- இந்தப் பிரிவுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் தொழிற்படுத்துதல், அவதானம் செலுத்துதல், வழிகாட்டுதல்களை அமுலாக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

1.4 நிருவாக கட்டமைப்பு – புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு (புத்தசாசன பிரிவு)



1.5 புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரிவின் நோக்கெல்லையின்கீழ் தொழிற்படுகின்ற திணைக்களங்கள்

- பௌத்த அலுவல்கள் திணைக்களம்
- இந்து மத அலுவல்கள் திணைக்களம்
- இஸ்லாமிய மத அலுவல்கள் திணைக்களம்
- கிறீஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழுள்ள நிதியங்கள்

- புத்தசாசன நிதியம்

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் கருத்திட்டங்கள்

- கருத்திட்டத்தின் பெயர் : பல்லேகல செயலாற்றுகை பயிற்சி நிறுவக நிருமாணம் (தலதா மாளிகையுடன் இணைக்கப்பட்டது)
- பங்களிப்புச் செய்யும் முகவராண்மை: இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில்.
- வலுவூட்டல் அதிகாரசபை நிறுவகம் : இந்திய உயர் ஸ்தானிகராலயம்
- ஒப்பந்ததார் : லிங்க் இஞ்சினியரிங் தனியார் லிமிட்டட்.
- மதிப்பீட்டுச் செலவு : இந்திய உதவிகள் ரூபா. 123.8 மி.
- இலங்கை அரசாங்கம் : ரூபா. 21.9 மி.
  (பெசேவ கொடுப்பனவு) ரூபா. 145.7 மி.

2016.09.16 ஆம் திகதியிலிருந்து 2021.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்

மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மி.)	2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான செலவினம் (ரூ.மி.)	2021 நிதி ஒதுக்கீடு (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான செலவினம் (ரூ.மி.)	2021.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான து. (ரூ.மி.)	பௌதீகசார் முன்னேற்றம் (%)
123.8	76.26	48.00	34.33	110.59	83%
21.9	6.08	9.30	**5.28**	11.36	
145.7	82.34	57.30	39.61	121.95	

***2021.12.31 ஆம் திகதியில் குறிப்பிடப்பட்ட செலவினமானது 2017 இலிருந்து (இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து) இதுவரையிலான முன்னேற்றத்துடன் தொடர்புடையதாகும்.**

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1. 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் (டிசம்பர் 31 இலுள்ளவாறு)

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம்	2021 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)	நிறுத்தப் பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)	பௌதீக சார் முன்னேற்றம் (%)	2021.12.31 இலுள்ளவாறான நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட தகவல்கள்
1.	புனிதப் பிரதேசங்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்	75.0	33.67	97.6	36.58	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள் – ரூ.மி. 4.2
2.	குறைவிருத்தியுடைய அறநெறிப் பாடசாலைகளினை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்	150.0	8.0	97.0	121.26	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள – ரூ.மி. 11.23
3.	குறைவிருத்தியுடைய விகாரைகளினை மீளமைக்கும் கருத்திட்டம்	250.0	-	95.78	225.23	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள – ரூ.மி. 11.95
4.	நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டம்	80.0	4.0	68.47	65.86	செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள – ரூ.மி. 2.28
5.	தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல்	9.3	1.8	83	5.3	ஒப்பந்ததாரரின் வினைத்திறனின்மையால் மந்த கதியிலான முன்னேற்றம்
6.	வித்தியாலங்கார சர்வதேச மாநாட்டு மண்டப நிருமாணம்	48.076	-	100	43.57	5 ஆம் கட்டம் வரையில் வேலையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
7.	ஏனைய மொழிகளினை மேம்படுத்துதல் மற்றும் சமய சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டம	8.0	1.9	70	3.25	கோவிட் 19 பரவல் மற்றும் சமய சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக கல்வி நிறுவனங்களினால் பாடநெறிகளினைப் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
8.	இணையத்துக்கான கலைக் களஞ்சியம் உள்ளடங்கலாக.	6.0	6.0	-	0.0	-

9.	கட்டுவாப்பிட்டியவிலுள்ள புனித செபஸ்தியான் தேவாலயத்தின் அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிருமாணம்.	66.0	-	17	11.72	-

2.1.1 புனிதப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

புனிதப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது இந்த அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பிரதான பணியாகும். அதற்கிணங்க, புத்தசாசன விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் படி, புனிதப் பிரதேங்களின் இருப்பினை நீண்ட காலத்திற்கு பாதுகாக்கும் பொருட்டு புனிதப் பிரதேசங்களை புனிதப் பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. புனிதப் பிரதேசங்களை வடிவமைத்து அபிவிருத்தி செய்யும் அதிகாரமானது புத்தசாசன அமைச்சருக்கு ஆரம்பத்தில் இருந்த போதிலும், இந்த வருட இறுதியில் இடம் பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பின் போது இந்த விடயம் தொடர்பில் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே, 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. (26 ஆவது உறுப்புரையின்படி) நகர மற்றும் நாட்டு திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) மற்றும் 21(2) ஆ ஆம் பிரிவுகளின் கீழ் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணிகள் புனிதப் பிரதேசங்களாக அழைக்கப்படுகின்றன. இது தொடர்பில், பௌதீக திட்டமிடல் திணைக்களம் மற்றும் நில அளவைத் திணைக்களம் என்பவற்றின் உதவுகையானது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

புனிதப் பிரதேசங்களாக அடையாளங் காண்பதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

- சமய ரீதியான முக்கியத்துவம்
- வரலாற்று ரீதியான முக்கியத்துவம்
- தொழ்பொருள் ரீதியான முக்கியத்துவம்
- கலாச்சார ரீதியான முன்னேற்றம்
- கட்டிடக் கலை ரீதியான முக்கியத்துவம்
- சுற்றாடல் ரீதியான முக்கியத்துவம்
- பொருளாதார மற்றும் சமுக முக்கியத்துவம்

2021 ஆம் ஆண்டில் இந்தக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூபா. 75 மில்லியனாகும். அதில் அமைச்சரவை அங்கீகாரத்திற்கிணங்க, ரூபா. 33.67 மில்லியன் தொகையானது முடக்கப்பட்டதுடன் ரூபா. 36.58 மில்லியன் தொகையானது 2021 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்டுள்ளது.



நாகதீப ரஜமகா விகாரையின் விகாரை மந்திரய மேம்படுத்தல்



நாகதீப ரஜமகா விகாரையின் வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கான கழிவறை முறைமையினை நிருமாணித்தல்



ஒலபொடுவ ரஜமகா விகாரையின் பாதுகாப்பு வேலி நிருமாணம்



ஒலபொடுவ ரஜமகா விகாரையின் தம்பித்த விகாரையினை புத்தாக்கம் செய்தல்.

2.1.1.1 அரச வெசாக் பண்டிகை - 2021

அரச வெசாக் பண்டிகை – 2021 ஆனது யாழ் மாவட்டத்தின் வேலணை செயலாளர் பிரிவிலுள்ள நாகதீப ரஜ ம`ா விகாரையில் நடாத்தப்பட்டதுடன் இந்தப் பிரதேசமானது எதிர்காலத்தில் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது. அதற்குச் சமாந்திரமாக, வி`ார மந்திர புத்தாக்க வேலைகள், வெளிநாட்டவர்களுக்கான கழிவறை முறைமை நிருமாணம், பக்கச் சுவர் நிருமாணம், பொத்குல் விகாரை மற்றும் தேவ மந்திர என்பனவற்றக்கான நிருமாணப் பணிகள் என்பன இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபா. 15.72 மில்லியன் வழங்கப்பட்டுள்ள போதிலும், இதற்காக ரூபா.12.73 மில்லியனே செலவிடப்பட்டுள்ளது.

2.1.1.2 2021 ஆம் ஆண்டில் புனிதப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட விஹாரைகள்.

1. மம்பிட்ட கலன் ரஜமகா விகாரை

2.1.1.3 அரச பொசன் பண்டிகை

2021 ஆம் ஆண்டுக்கான அரச பொசன் விழாவானது மிஹிந்தாலய புனித பிரதேசத்தை மையப்படுத்தி 21.06.2021 முதல் 27.06.2021 வரை 'உலகில் உள்ள அனைவரும் குணமடையட்டும் மற்றும் நலமடையட்டும்' என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்றது. இதேவேளை, மிஹிந்தல சதிபிரித் கீர்த்தனையும் இடம்பெற்றதுடன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் ஊடக அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் மிஹிந்தாலய புனித பிரதேசத்தை மையப்படுத்தி இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.





2.1.2 குறைவிருத்தியுடைய அறநெறிப் பாடசலைகளினை விருத்தி செய்வது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் அறநெறிப் பாடசாலைக் கல்வியினை ஊக்குவிப்பதற்கான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும்.

2021 இல் அறநெறிப் பாடசாலைகளின் கழிவறை வசதிகளினைப் பூர்த்தி செய்வது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அறநெறிப் பாடசாலை கட்டிடங்களின் நிருமாணம், மறுசீரமைப்புக் கருத்திட்டங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை வழங்கும் கருத்திட்டம் என்பனவும் அமுல்படுத்தப்பட்டன. சுகாதார நலன் பேணல் வசதிகள் தொடர்பான 301 கருத்திட்டங்கள், 2021 இல் 21 மாவட்டங்களை உள்ளடக்கியதான அறநெறிப் பாடசாலை கட்டிடங்களின் நிருமாணம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றுக்கான 152 கருத்திட்டங்கள் மற்றும் 91 அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்கும் கருத்திட்டம் என்பன உள்ளடங்கலான மொத்தமாக 544 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2021.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான மொத்த செலவினம் ரூபா. 121.26 மில்லியனாகும். போதிய கட்டுநிதி இல்லாமையால் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 11.23 மில்லியன் பெறுமதியான விற்பனைச் சிட்டைகள் செலுத்தப்படாதுள்ளன.



மாதம்பகம பிரதேச செயலகத்தில் விமல தம்ம பாடசாலை கட்டிட நிருமாணம்



மாதம்பகம செயலகத்தில் விமல தம்ம பாடசாலை கட்டிட நிருமாணம்

2.1.3 மேம்படுத்தப்படாத விகாரைகளினை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது புத்த மதத்தினை பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்குடன் விகாரைகளின் பௌதீக ரீதியான குறைபாடுகளினைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் பங்களிப்பினை வழங்கும் பொருட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ‘‘கம சமக பிலிசதர’’ நிகழ்ச்சித்திட்டத்தினூடாக முன்மொழியப்பட்ட விகாரைகள் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கு கிடைக்கப் பெறும் கோரிக்கைகளினைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆலயங்கள் பெயரிடப்படுகின்றன. மேலும், விகாரைகளின் சமய சேவைக்கான பங்களிப்பு மற்றும் தேவைப்பாடுகளின் தன்மை ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, பின்வரும் வகைப்படுத்தல்களின் கீழ் ஒரு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்களிப்புடன் பொரத்தமான கோவில்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

வகையீடு

- பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அதன் காணியின் உரித்துடமையானது விகாரை அல்லது பிக்குணிகளுக்கான தபோதனசாலையாக இருத்தல் வேண்டும்.
- கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் ஏனைய நிதி மூலங்களிலிருந்து நன்கொடைகள் எதனையும் பெற்றிருக்காது இருத்தல் வேண்டும்.
- அவற்றில் நீர் வழங்கல், மின்சார இணைப்பு மற்றும் கழிவறை வசதிகள் போதியவளவில் இல்லாதவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- போதுமான இடவசதியினைக் கொண்டிராத மற்றும் தற்காலிகமாக நிருமாணிக்கப்பட்ட / பகுதியளவில் நிரந்தரமானவையாக இருக்கின்ற துறவிகள் / பெண் துறவிகளின் (Sangawasa) தங்குமிடங்களினை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுகின்றன.

- அன்னதான மண்டபம் (dhanashalawa) கலச அறை (viharageya) மற்றும் அறநெறி மண்டபம் (Dharma Shalawa) என்பன போதுமானளவில் காணப்படாதவிடத்து அத்தகைய வசதிகள் வழங்கப்படும்.

  2021.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான செலவினம் ரூபா. 225.23 மில்லியனாகும். இந்தத் தொகையிலிருந்து 24 மாவட்டங்களிலுள்ள விகாரைகளுடன் தொடர்புடைய 498 கருத்திட்டங்களை விருத்திய செய்ய முடிந்துள்ளது. போதிய கட்டுநிதி இல்லாமையால் 2022 இல் ரூபா. 11.95 மில்லியன் தொகையினைக் கொண்டுள்ள பட்டியல்கள் செலுத்தப்படாதுள்ளன.



யாழ் திஸ்ஸ விகாரையின் மடாலய நிருமாணம்



உடவெலிவித்திதலாவ சிறி அசோகராம விகாரையின் கூரை புத்தாக்கம்



உடகம சிறி சசனலங்கார புராதன விகாரையின் பாதுகாப்பு பக்கச் சுவர் நிருமாணம்



முல்லைத்தீவு, கிரிபன்வெவ, வெலிஓயாவிலுள்ள சிறி தம்ம பிரணிதரம மடாலாய நிருமாணம்

2.1.4 நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டம்

போதைப் பொருளற்றதும் தன்னம்பிக்கையினைக் கொண்டதும், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான வாழ்வு நிறைந்த, குரூரமற்ற, ஆன்மிக ரீதியான சிந்தனைகளினைக் கொண்ட, மிகச் சிறந்ததும் மேம்படுத்தப்பட்டதுமான மனித வளத்தினை முழுமையாகக் கொண்டதுமான கிராமமே புண்ணியகிராம என அழைக்கப்படுகின்றது. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டமானது புத்த மதத்தினை பாதுகாத்தல் மற்றும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் ”கிராம விகாரை” எண்ணக்கருவினை உருவாக்குவதன் மூலம் சாதகமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான புத்தமத கோட்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களினை ஊக்குவிப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்றது.

ரூபா.80 மில்லியன் ஏற்பாடானது 2021 இல் நிலையான புண்ணியகிரம நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 84 பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் 1818 பெறமதி மற்றும் ஆன்மீக விருத்தி கருத்திட்டங்கள் 22 மாவட்டங்களில் அமுல்படுடுத்தப்பட்டுள்ளன. விகாரைகளினை மையப்படுத்தியதாக அமுல்படுத்தப்பட்ட இக்கருத்திட்டத்தின் கீழ், அறநெறிப் பாடசாலைகளுக்கு நூலக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் நூலகங்களுக்கு நூல் தொகுதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

2021.12.31 இலுள்ளவாறான செலவினமானது ரூபா. 65.86 ஆக இருந்துள்ளதுடன் செலுத்தப்படாதுள்ள ரூபா. 2.28 மில்லியன் பெறுமதியுடைய சிட்டைகள் போதுமான கட்டுநிதி இல்லாமையால் 2022 இல் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

2021 இல் தெரிவு செய்யப்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், ஆன்மீக விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டில் நிலவிய கொவிட் 19 நோய்த் தொற்று காரணமாக பல்வேறு கிராமங்களில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.




மலிம்பட பிரதேச செயலகத்தில் சிறிசுமணராம விகாரையில் நடாத்தப்பட்ட பெற்றோர் நலன்பேணல் நிகழ்ச்சித்திட்டம்



செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் சிறி வனவாசி யோகா நிலையத்தில் கழிவறை முறைமையினை தாபித்தல்.



தலாவ பிரதேச செயலகத்திலுள்ள சிறி விஜயசிங்கராம விகாரையில் வெசாக் பக்தி கீதம் இசைக்கப்பட்டது.



நூலகங்களுக்கு அறநெறிப் பாடநூல்கள் வழங்கப்பட்டமை.

2.1.4.1. போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

சமய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குதல் மற்றும் அனைத்து குடிமக்களையும் பூரண பொருளாதார மற்றும் ஆன்மீக வளர்ச்சியினைக் கொண்டவர்களாக முன்னேற்றுதல் என்பன இந்த அமைச்சின் நோக்கங்களாகும். போதைப்பொருள் பாவனையில் இருந்து மக்களைத் தடுப்பதே அந்த நோக்கங்களை அடைவதற்கான இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதன் கீழ் 2021 ஆம் ஆண்டில் 12 மாவட்டங்களின் 20 நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ரூபா. 0.62 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் ஒன்று கூடுவதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2021 இல் போதைத் தடுப்புக்காக விடுவிக்கப்பட்ட ஏற்பாட்டின் தொகுப்பு

தொடர் இல.	மாவட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	செலவினம்
1	கேகாலை	2	69,000.00
2	மாத்தறை	1	48,360.00
3	நுவரெலியா	1	25,000.00
4	`ம்பாந்தோட்டை	1	66,000.00
5	குருநாகல்	3	102,100.00
6	மாத்தளை	1	25,000.00
7	கொழும்பு	1	19,000.00
8	அநுராதபுரம்	3	81,925.00
9	கண்டி	3	64,850.00
10	பொலநறுவை	1	25,000.00
11	காலி	1	41,000.00
12	கம்ப`ா	1	38,450.00
13	காலி / மாத்தறை	1	11,850.00
மொத்தம்		**20**	**617,535.00**

2.1.5 பிக்கு பயிற்சி மற்றும் சமய சகவாழ்வு திட்டம்

2.1.5.1 பிக்கு பயிற்சி ஊக்குவிப்பு திட்டம்

பிக்குகளின் பல்வேறு மொழிகளின் அறிவு, புரிதல் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டுத் திறன்களின் வளர்ச்சி பௌத்தத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் இருப்புக்கு மிகவும் முக்கியமானது. இந்த நோக்கத்திற்காக, இந்நாட்டில் உள்ள பிக்குகளின் மொழி அறிவாற்றலை விரிவுபடுத்துவதற்காக தமிழ், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளைக் கற்பிப்பதற்கும்,உலகில் தர்மத்தை வளர்க்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2021 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களை மையப்படுத்தி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து பாடநெறியினை நிறைவு செய்யும் முன்னேற்றத்தைப் பொறுத்தே அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனம்	பாடநெறி	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவினம்
இலங்கை சர்வதேச பௌத்த கல்வி நிலையம்	ஆங்கிலம் / தமிழ் / கணனி பயிற்சி பாடநெறிகள் (கண்டி மாவட்டம்)	31	950,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	ஜப்பானிய சான்றிதழ் பாடநெறி	40	79,620.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	ஆங்கில டிப்புளோமா பாடநெறி	40	360,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	தமிழ் டிப்புளோமா பாடநெறி	40	360,000.00
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	ஜப்பானிய சான்றிதழ் பாடநெறி	40	420,000.00
அஸ்கிரி மகா விகாரையின் மகா விகாரை மகா பிரவென	ஜப்பானிய மொழி பாடநெறி	350	273,000.00
மஹரகம சிறி வஜிரஞான பிரிவென	ஆங்கில சான்றிதழ் பாடநெறி	57	175,000.00
அரச கரும மொழிகள் திணைக்களம்	மேல் மாகாண தமிழ் பயிற்சி பாடநெறி நிகழ்ச்சித்திட்டம் – பாடவிதானத்தினை ஒழுங்கமைப்பதற்காக	0	10,000.00
மொத்தம்		**598**	**2,627,620.00**

2.1.5.2 சமய சகவாழ்வு திட்டம்

அனைத்து சமயத்தினதும் உரிமைகளைப் பாதுகாத்து அனைத்து சமயங்களுடனும் அனைத்து இன மக்களுடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் சகவாழ்வுடனும் வாழக்கூடிய ஒழுக்க நெறியான சமூகத்தை கட்டியெழுப்புவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் 12 மாவட்டங்களில் 20 சமய சகவாழ்வுத் திட்டங்களுக்கு ரூபா. 2.19 மில்லியன் ஒதுக்கீடு வெளியிடப்பட்டுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் ஒன்று கூடுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இந்த நிக்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2.1.6 தலதா மாளிகையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலையத்தின் நிருமாண வேலைகள்

இந்த செயலாற்றுகை பயிற்சி நிலையத்தின் நிருமாண வேலைகள், எதிர்கால தலைமுறைக்கு கலை சார்ந்த பாரம்பரியங்களை பரிசளிக்கும் நோக்குடன் இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதி நன்கொடையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா. 145 மில்லியனாகும். இக்கருத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கிணங்க, வேலைப் பெறுமதி மீது மதிப்பிடப்பட்ட பெசேவ உள்ளூர் நிதியங்களினால் செலுத்தப்படுதல் வேண்டும். எனவே, ரூபா. 9.3 மில்லியன் நிதியானது 2021 இல் இந்நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய பெறுகைகள் நடவடிக்கைகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இக்கருத்திட்டப் பணிகளின் மேற்பார்வையானது இந்த அமைச்சு, இந்திய உயர் ஸ்தானிகராலயம், தலதா மாளிகையின் வெளிநாட்டு அலுவல்கள் பிரிவு என்பவற்றின் பிரதிநிதிகளினை உள்ளடக்கியதான குழுவொன்றினால் கையாளப்பட்டு வருகின்றது. ஒப்பந்தாரரின் திறமையின்மை காரணமாக இக்கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டத்தில் ஏறக்குறைய 83% முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.





2.1.7 வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபம்

வித்தியாலங்கார பிரிவெனவிற்கு அரசாங்க அனுசரணைப் பங்களிப்பினை வழங்கும் நோக்குடன் நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப் போக்குவரத்து அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாட்டு மண்டபத்தின் நிருமாணப் பணிகள் வழங்கப்பட்டதன் பின்னர், நிருமாணப் பணிகளின் Vஆம் கட்டங்கள் புத்தசாசன அமைச்சின் நோக்கெல்லைக் ஏற்ப பூர்த்தி செய்யப்பட்டுள்ன.

2021.04.09 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கிணங்க, இக்கருத்திட்டத்தின் கட்டம் V ஆம் கட்டத்திற்குரிய நிருமாண வேலைகளுக்காக ரூபா.48.076 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த தொகையில், ரூபா. 15.67 மில்லியன் மற்றும் ரூபா. 25.18 மில்லியன் ஆகிய தொகைகள் இரண்டு வேறுபட்ட கட்டளைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளதுடன் ரூபா. 2.72 மில்லியன் ஆனது பாதுகாப்பு சேவைகள் மற்றும் மின்சாரப் பட்டியல்களினைச் செலுத்தவதற்காக செலவிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தினை அமைச்சுக்குப் பொறுப்பேற்று அதனை வித்தியாலங்கார நம்பிக்கை நிதியத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



மாநாட்டு மண்டபத்தின்



வெளிப்புறத் தோற்றம்.

2.1.8 கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியான் தேவாலயத்திலுள்ள அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிருமாணம்.

இந்த அமைச்சானது கட்டுவாப்பிட்டியவிலுள்ள புனித செபஸ்தியான் தேவாலய கட்டிடத்திலுள்ள அறநெறிப் பாடசாலை நிருமாணம் தொடர்பில் 2021 இல் ரூபா. 66.00 மில்லியன் ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளதுடன் நிருமாண வேலைகள் கீராமிய வீடமைப்பு மற்றும் நிருமாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வரும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளபபட்டு வருகின்றதுடன் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா. 11.72 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

2.1.9 ஏனையவை

2.1.9.1 புத்த மத மதியுரைக் குழு

புத்தசாசனம் மற்றும் சமய ரீதியான பிரச்சினைகளை கையாளுவது தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக மகாசங்கத்தின் மூன்று பீடங்கள் மற்றும் மற்றும் அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மதியுரைக் குழுவானது செயற்படுகின்றது.

ஜனாதிபதி மதியுரைக் குழுவானது 2021 ஆம் ஆண்டில் 2021.02.12, 2021.03.19, 2021.04.23, 2021.07.16 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் தொழிற்பட்டு வரும் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் தொடர்பான மதியுரைகள் மகா சங்கத்தினால் வழங்கப்படுகின்றன.

மஹாநாயக்க தேரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பௌத்த மத மதியுரைக் குழுவொன்று, புத்தசாசனத்தின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மை மற்றும் மதம் சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் இந்த அமைச்சுக்கு பௌத்தம் சார்ந்த வியடங்கள் தொடர்பில் அறிவுறுத்தல்களினை வழங்குதல் மற்றும் மதியுரைகளினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் குழுவானது புத்த மதத்தினை முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அமைச்சுக்கு ஆலோசனைகளினை வழங்கி வருகின்றது.

2.1.9.2 பௌத்த கலைக்களஞ்சியம்

இணையத்தளத்தில் பௌத்த கலைக் களஞ்சியத்தினை பதிவேற்றம் செய்வதற்காக 2021 இல் இந்த அமைச்சுக்கு ரூபா. 6.0 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க, இந்த ஒதுக்கீடானது இடைநிறுத்தப்பட்டுள்ளது. பௌத்த கலைக் களஞ்சியத்தினை இற்றைப்படுத்துவதற்காக தனியானதொரு அலுவலகமொன்றினை ஏற்பாடு செயதுள்ளதுடன் அது தொடர்பான நடவடிக்கைகளினை திட்டமிடுவதற்கு முறையான பதவியணியொன்றினை பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

2.1.9.3 விசாக்களுக்கான பரிந்துரைகளினை வழங்குதல்

இந்திய யாத்திரைக்கான கட்டணமில்லா விசாக்களினைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளினை வழங்குதல், வெளிநாடுகளுக்குச் செல்கின்ற துறவிகளுக்கான பரிந்துரைகளினை வழங்குதல் மற்றும் இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டினைச் சேர்ந்த துறவிகளுக்கு விசாக்களினை வழங்குவது இந்த அமைச்சின் கடமையாகும்.

I. இந்தியாவில் புனிதப் பயணம் மேற்கொள்ள மதகுருமார்கள் / பாமரர்களுக்கு விசா பரிந்துரைகளை வழங்குதல்

இந்தியாவிற்கான புனித யாத்திரைகளுக்கு இலவச விசாவைப் பெறுவதற்கு மதகுருமார்கள் / பாமரர்களுக்கு பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. இந்த பயணங்கள் 2021 ஆம் ஆண்டில் கொரோனா தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்டன. மார்ச் 2022முதல் சுற்றுப் பயணங்களை மீண்டும் ஆரம்பிப்பது சரியானதா என்பது குறித்து சுற்றுலா சங்கங்களுடன் கலந்துரையாடிய பிறகு, எங்கள் நிபந்தனைகளின்படி சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஆலோசனை கேட்டுள்ளோம்.எதிர்காலத்தில், கோரிக்கைகளுகக்மைவாக, விசாக்களுக்கான பரிந்துரைகள் வழங்கும் செயற்பாடானது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

II. கல்வி மற்றும் பௌத்த மத நடவடிக்கைகளுக்காக இங்கு வரும் வெளிநாட்டு துறவிகள், கன்னியாஸ்திரிகள் மற்றும் சாதாரண நபர்களுக்கு விசா பரிந்துரைகளை வழங்குதல்.

இதன் கீழ் வருகை விசாக்கள் மற்றும் வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. விசாவிற்கான பரிந்துரைகள் 2021இல் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

விசாவுக்கான பரிந்துரைகள் - 2021

தொடர் இல.	நாடு	வதிவிட விசா	வருகை விசா
1	பங்களாதேஸ்	161	13
2	நேபாளம்	65	3
3	கம்போடியா	110	19
4	சீனா	3	1
5	மியான்மார்	48	1
6	இந்தியா	30	2
7	ஜப்பான்	10	-
8	ஐக்கிய அமெரிக்கா	15	-
9	இங்கிலாந்து	3	-
10	வியட்னாம்	21	7
11	கொரியா	5	-
12	ஜேர்மனி	5	1
13	செக் குடியரசு	6	-
14	சிங்கப்பூர்	4	2
15	கனடா	4	3
16	பிரான்ஸ்	5	3
17	இத்தாலி	2	-
18	சுவிற்சலாந்து	2	-
19	ஓஸ்ரியா	2	-
20	தாய்லாந்து	3	-
21	அவுஸ்திரேலியா	4	1
22	ரஷியா	3	2
23	ஹங்கேரி	1	-
24	ஆர்மேனியா	1	-
25	இந்தோனேசியா	3	2
26	ஸ்லோவாகியா	-	1
27	ரோமானியா	-	1
28	நியூசிலாந்து	1	-
29	இஸ்ரேல்	2	-
30	பெல்ஜியம்	1	1
31	நெதர்லாந்து	1	-
மொத்தம்.		520	63

III. கல்விசார் மற்றும் தூதரக வேலைகளுக்காக துறவிகள் வெளிநாடு வெளிநாடு செல்லும் போது பரிந்துரைக் கடிதங்களினை வழங்குதல்

தேரவாத பௌத்தத்தை சர்வதேச ரீதியில் பரப்புவதற்கோ அல்லது கல்வி நோக்கத்திற்கோ வெளிநாடு செல்வதற்காக இலங்கை பிக்குகளுக்கு விசா பெற்றுக் கொடுப்பதற்கான பரிந்துரை கடிதங்கள் சம்பந்தப்பட்ட தூதரகங்களுக்கு வழங்கப்படுகின்றன.

2021 இல் வழங்கப்பட்ட பரிந்துரை கடிதங்களின் எண்ணிக்கை

தொடர் இல.	நாடு	புரிந்துரைக் கடிதங்கிள்ன எண்ணிக்கை
1	இத்தாலி	3
2	ஜேர்மனி	3
3	இந்தியா	12
4	ஐக்கிய அமெரிக்கா	26
5	நியூசிலாந்து	1
6	அவுஸ்திரேலியா	10
7	ஐப்பான்	6
8	கனடா	8
9	சுவிற்சலாந்து	2
10	நேபாளம்	2
11	கொரியா	6
12	இஸ்ரேல்	1
13	இங்கிலாந்து	23
14	பிரான்ஸ்	16
15	தாய்லாந்து	5
மொத்தம்		**124**

2.1.9.4 யாத்திரிகர் விடுதியின் பராமரிப்பும் மேம்பாடும்.

இந்த அமைச்சுக்கு பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு யாத்திரிகர் விடுதிகள் சொந்தமாகவுள்ளன. குறித்த யாத்திரிகர் விடுதிகளின் பராமரிப்பு மற்றும் நிருவாக நடவடிக்கைகள் என்பன இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **புதுடில்லியிலுள்ள புத்தமத யாத்திரிகர் விடுதி**

இந்த யாத்திரிகர் விடுதியானது புதுடில்லி,பகர்கஞ், வெல்மிஸ்போட் மாவத்தையில் அமைந்துள்ளது. இந்த புத்த மத யாத்திரிகர் விடுதியானது இந்தியாவினால் இலங்கைக்கு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட காணியில் அமைந்துள்ளது. இது இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.



- **நேபாளத்திலுள்ள துட்டகெமுனு யாத்திரிகர் விடுதி**

இந்த யாத்திரிகர் விடுதியானது நேபாளத்திலுள்ள ருபன்டே, லும்பினியில் அமைந்துள்ளது. இந்த யாத்திரிகர் விடுதியினை நிருமாணிப்பதற்கான காணி லும்பினி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த யாத்திரிகர் விடுதியானது நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுகின்றது.



- **அநுராதபுரம் குருந்தம்குலம ரஜரட்ட யாத்திரிகர் விடுதி**

இந்த விடுதியானது இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்பட்டு வருவதுடன் ஒரே நேரத்தில் ஏறக்குறைய 30 பேர் தங்குவதற்கான வசதிகள் உள்ளன.



2.1.10 சமய அலுவல்கள் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகள்

அனைத்து மதங்களுக்குரிய திணைக்களங்களும் சமய சகவாழ்வுக்காக ஒரு அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு பேணப்படுகின்றன. இந்து சமய, முஸ்லிம், சமய மற்றும் கிறிஸ்தவ சமய அறநிலையத் திணைக்களங்களின் நிருவாகம் மற்றும் முகாமை என்பன சமயப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறன.

இந்தப் பிரிவானது சமய மற்றும் சமூக சகவாழ்வுக்கான பின்வரும் தொழிற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது.

- ”கம சமகபிலிசதரக்துளின்வடசமகாயலிகமதா” என்ற தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இந்து, முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ மதங்கள் தொடர்பான பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டு, தேவையான தீர்வுகளை வழங்கவும், செயற்பாட்டினைக் கண்காணிக்கவும் அந்த துறைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

- ”நாட்டைக் கட்டியெழுப்பும் செழுமைக்கான தொலைநோக்கு” கொள்கையின்படி அந்தந்த மதத் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல்

- இந்து சமய, முஸ்லீம், மத மற்றும் கிறிஸ்தவ சமய விவகாரங்கள் ஆகிய மூன்று திணைக்களங்களால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அந்தந்த மதத்தின் மதகுருமார்கள் மற்றும் பாமரர்களுக்கான விசா மற்றும் வதிவிட விசா வழங்குவதற்கு தேவையான அனுமதியைப் பெற வழிமொழிதல். அந்த அமைச்சினால் அறிவிக்கப்பட்ட ஏனைய விசேட விடயங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயலாற்றுதலும் அறியத் தருதலும்

- மத பயணங்களுக்கான விசா சலுகைக்கான பரிந்துரை வழங்குதல்

- கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் கோவில்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி உதவிக்கான கோரிக்கைகளை மேற்கொண்டு நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட திணைக்களுக்கு அனுப்பி வைத்தல்.

- கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் கோவில்களை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் எழும் சட்ட அல்லது சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சின் தலையீடு மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை திணைக்களங்களுக்கு வழங்குதல்.

- மூன்று துறைகளின் நிறுவன நடவடிக்கைகளினை மேற்பார்வை செய்தலும் அவற்றுக்கான பரிந்துரைகளை வழங்குதலும்.

- நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மதப் புத்தகங்களை சுங்க வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து தேவையான பாதுகாப்பு

அனுமதியைப் பெற நடவடிக்கை எடுத்தல்

- மதங்களுக்கிடையிலான ஒத்துழைப்பையும் சகோதரத்துவத்தையும் மேம்படுத்த சகவாழ்வு திட்டங்களை ஒழுங்கமைத்து செயற்படுத்துதல்.

- வழிபாட்டுத் தலங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக பறிமுதல் செய்யப்பட்ட கட்டுமானப் பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கான பரிந்துரையை நீதி அமைச்சிடம் சமர்ப்பித்தல்.

- மத விவகாரங்களுக்காக திணைக்களங்களுக்கு வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகளை சுங்கத்திலிருந்து விலக்களிப்புச் செய்வதற்கு அமைச்சு நேரடியாக தலையீடு செய்தல்.

மேலே உள்ள பக்கங்கள் 01 முதல் 23 வரை உள்ள தகவல்கள் சரிபார்க்கப்பட்டதாகவும், அந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுவதாகவும் இத்தால் சான்றுப்படுத்தகின்றேன்.

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்.

2.3 எதிர்கால இலக்குகள்

2.3.1 2022 இல் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டம்	2022 செயல்திட்டத்திற்கு அமைவாக எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடு / இலக்குகள்.	2022 இன் எதிர்கால கண்ணோட்டத்திற்கு அமைவான இலக்குகள்.
01	குறைவிருத்தி விகாரைகளினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 100.00	இயற்கை பேரழிவினால் பாதிப்புக்குள்ளான விகாரைகளின் மேம்பாடு - ரூபா. 50 மில். விகாரைகளின் சில்மதரம / மீள் நிருமாணதிற்கான பெண் துறவிகள் மடம், அவசகுட்டி உள்ளடங்கலான விகாரைகளின் நிருமாணம் - ரூபா. 50.00 மில். (2021 இல் செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள் உள்ளடங்கலாக)
02	இடர் மிகுந்த இடங்களிலுள்ள விகாரைகளினை விருத்தி செய்தல்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 500.00	குடித்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் இடர் மிகுந்த பிரதேசங்களாக அடையாளங் காணப்பட்ட 100 பிரதேச செயலகங்களிலுள்ள விகாரைகளின் நிருமாணங்கள் மற்றும் புத்தாக்கங்கள் - ரூபா. 475.00 மில். 2022 ஆம் ஆண்டுக்கான வெசாக் பண்டிகையினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் இரத்தினபுரியிலுள்ள குரகல ரஜ மஹா விகாரையில் பிக்குகளுக்கான தங்கு விடுதி நிருமாணம் - ரூபா. 25.00 மில்.
03	நிலையான புண்ணியகரம நிகழ்ச்சித்திட்டம்	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 40.00	மையப்படுத்திய விகாரைகளில் பௌதீக வசதிகள் / ஆன்மீக விருத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக - ரூபா. 15.00 மில். (2021 ஆம் ஆண்டில் செலுத்தப்படாதுள்ள பட்டியல்கள் உள்ளடங்கலாக ரூபா. 2.28) புண்ணியகிரம நிகழச்சித்திட்டம் (2022-2024) ரூபா.19.00 மில். போதை தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - ரூபா 6.00 மில்.
04	புனிதப் பிரதேச அபிவிருத்தி	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 20.00	வர்த்தமானியினால் பிரசுரிக்கப்பட்ட புனிதப் பிரதேசங்களின் பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். - ரூபா.20.00 மில். (2021 ஆம் ஆண்டில் செலுத்தப்படாதுள்ள ரூபா. 4.2 மில். பட்டியல்கள் உள்ளடங்கலாக)
05	பிக்குகளுக்கான பயிற்சி மற்றும் சமய சகிப்புத்தன்மை வாய்ந்த நிகழ்ச்சித்திட்டம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 7.5	அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட மொழிக் கற்கை நிறுவகத்தில் ஆங்கிலம், தமிழ் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளினை நடாத்துதல் - ரூபா.7.5 மில்.
06	தலதா மாளிகை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பள்ளேகல செயலாற்றுகை பயிற்சி நிலைய நிருமாணம்.	எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்) – 0.5	நிருமாணம் பூர்த்தியடைந்துள்ளது

அத்தியாயம் 3 - 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்(

ஏசிஏ –எப

3.1 - 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று

வ.செ.திட்டம் 2021 ரூபா.		குறிப்பு	உண்மையான மீள் 2021 ரூபா.	2,020 ரூபா.	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	பொருட்கள், சேவைகளுக்கான வரிகள்	2	-	-	ஏசிஏ1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள	3	-	-	
-	வரியல்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி முற்பணம்		283,135,000	173,100,000	ஏசிஏ3
-	வைப்புக்கள்		4,106,182	1,463,086	ஏசிஏ4
-	முற்பணக் கணக்குகள்		7,495,596	3,868,728	ஏசிஏ5
	ஏனைய பிரதான பேரேட்டு பெறுகைகள்		9,925,899	11,425,949	
-	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)**		**304,662,677**	**189,857,763**	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ =(அ) +(ஆ)**		**304,662,677**	**189,857,763**	
	திறைசேரிக்கான அனுப்புதல்கள் (ஈ)		-	-	
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாப் பெறுகைகள் (உ) = (இ) - (ஈ)		**304,662,677**	**189,857,763**	
	கழி: செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		-	-	
113,594,000	வேதனாதிகள், சம்பளங்கள் மற்றும் பிற ஊழிய நன்மைகள்	5	111,905,004	100,970,474	
166,970,300	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	100,750,657	72,682,142	ஏசிஏ2(ii)
450,000	உதவுதொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	7	422,037	425,401	
-	வட்டிக் கொடுப்பனவுகள	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	-	
281,014,300	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)**		**213,077,699**	**174,078,018**	
	மூலதனச் செலவினம்				
13,600,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடும்.	10	9,374,586	9,210,869	
78,000,000	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல்	11	17,478,797	5,002,121	
668,376,000	மூலதன மாற்றல்கள்	12	530,677,866	420,265,719	ஏசிஏ-2(ii)
	நிதிச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	13	-	-	
800,000	திறன் மேம்பாடு	14	199,000	50,500	
-	பிற மூலதனச் செலவுகள்	15	-	-	
760,776,000	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**557,730,249**	**434,529,208**	
	வைப்புக் கொடுப்பனவு		37,262,492	5,158,670	ஏசிஏ4
	முற்பணக் கொடுப்பனவு		9,031,644	5,779,027	ஏசிஏ5
	ஏனைய பிரதான பேரேட்டுச் கொடுப்பனவுகள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவுகள் (ஏ)		**46,294,136**	**10,937,698**	
	மொத்தச் செலவினம் (ஐ) = (ஊ + எ + ஏ)		-	-	
1,041,790,300			**817,102,084**	**619,544,924**	
	கட்டுநிதி மீதி		**(512,439,407)**	**(429,687,161)**	ஏசிஏ 7
	2021 டிசம்பர் 31 இல் கட்டுநிதி மீதி		**0**	**0**	ஏசிஏ3
(1,041,790,300)			**(512,439,407)**	**(429,687,161)**	

3.2 2021 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

உண்மையான

	குறிப்பு	2021	2020
		ரூபா.	ரூபா.
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி, உபகரணம	ஏசிஏ - 6	1,060,474,786	1,055,012,562
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஈஏசிஏ-5/5(அ)	22,944,435	21,408,386
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசிஏ - 3	-	-
மொத்தச் சொத்துக்கள்		**1,083,419,221**	**1,076,420,948**
நிகர சொத்து / பங்கு			
திறைசேரிக்கான தேறிய சொத்த		(1,306,567)	(35,998,926)
ஆதனம், பொறி, உபகரணம்		1,060,474,786	1,055,012,562
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசிஏ-5(ஆ)	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசிஏ--4	24,251,002	57,407,312
முற்பண மீதி	ஏசிஏ--3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,083,419,221**	**1,076,420,948**

மேலே உள்ள ஏ.சி.ஏ வடிவத்தில் எண் 25 முதல் 27 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 28 முதல் 52 வரையான பக்கங்களில் வழங்கப்பட் கணக்குகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணககியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள்,தொடர்புடைய கணக்கியல் குறிப்புக்கள் மற்றும் பிறகணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிபரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கின்றோம்."

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2022/04/07	திகதி : 07/04/2022	திகதி : 2022/04/07
Deshabandu Prof. Kapila Gunawardhane Secretary Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs No. 135, "Dahampaya", Srimath Anagarika Dharmapala Mawatha, Colombo 07.	G. Sandhnya Kumudunie Silva Chief Financial Officer Ministry of Buddhasasana, Cultural and Religious Affair "Dahampaya" Colombo 07	G. N. Munaweera Chief Accountant Ministry of Buddhasasana, Cultural and Religious Affairs "Dahampaya" Colombo 07

3.3. 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்ற

	உண்மையான 2021 ரூபா	மீள் சிராக்கப்பட்ட 2020 ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணம், அபராதம், தண்டப் பணம், உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	9,925,899	11,425,942
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
பெறப்பட்ட முற்பணம்	283,135,000	173,100,000
முற்பண அறவீடுகள்	7,910,933	6,188,003
பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புக்கள்	4,156,207	1,463,086
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)	**305,128,039**	**192,177,031**
கழி – காசு செலவிடல்:		
ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு	201,529,693	157,047,499
மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள்	422,037	425,401
ஏனைய தலைப்பக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட செலவுகள்	1,164,908	5,716,469
திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட கட்டுநிதி	-	-
முற்பண கொடுப்பனவுகள்	9,877,176	7,812,375
பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புக்கள்	18,603,081	5,158,670
தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)	**231,596,895**	**176,160,414**
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ)	**73,531,144**	**16,016,617**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
சொத்து விற்பனை பௌதீக ஆதன விற்பனை	-	-
உபகரண கட்டணங்கள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஈ)	**-**	**-**
கழி – காசு செலவிடல்:		
பௌதீக சொத்து கொள்வனவு நிர்மாணம் அல்லது வேறு முதலீடுகளைக் கையகப்படுத்துதல்	73,531,144	16,016,617
முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**73,531,144**	**16,016,617**
முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (உ)-(ஈ)	**(73,531,144)**	**(16,016,617)**
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சல்	**0.00**	**0.00**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுகை	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு (ஏ)	**-**	**-**
கழி – காசு செலவிடல்::		
உள்நாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாட்டுகாக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)	**-**	**-**
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஓ) = (ஏ) - (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஓ) = (ஏ)-(ஐ)	**-**	**-**
ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

தலைப்பு	நிகழ்ச்சித்திட்டம்(1)					நிகழ்ச்சித்திட்டம் (2)					மொத்தசெலவினம்
	ஏற்பாடு				செலவினம்	ஏற்பாடு				செலவினம்	
	வரவுசெலவுத் திட்டமதிப்பீட்டுஒதுக்கீடு	குறைநிரப்புமதிப்பீட்டுஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்ததேறியஒதுக்கீடு		வரவுசெலவுத் திட்டமதிப்பீட்டுஒதுக்கீடு	குறைநிரப்புமதிப்பீட்டுஒதுக்கீடு	நி.பி.66/69 மாற்றல்கள்	மொத்ததேறியஒதுக்கீடு		
	(1)	(2)	(3)	(4) = (1)+(2)+(3)	(5)	(6)	(7)	(8)	(9) = (6)+(7)+(8)	(10)	(11) = (5)+(10)
மீண்டுவரும்செலவுகள்											
ஆளுக்கியவேதனாதிகள்	107,700,000		3,424,000 (2,900,000)	113,594,000	111,905,004 2,012,421	-	- -	- -	- -	- -	111,905,004
பிரயாணச்செலவுகள்	5,800,000.00	2,470,000	2,686,000	2,900,000		-	-	-	-	-	2,012,421
வழங்கல்கள்	13,200,000	- -		15,886,000	15,844,235	-					15,844,235
பேணுதல்செலவுகள்	13,100,000	-	(3,421,000)	9,679,000	5,904,221	-	-	-	-	-	5,904,221
சேவைகள்	21,450,000 450,000	- -	211,000	21,661,000 450,000	19,443,969	113,400,000	3,444,300	-	116,844,300	57,844,300	76,989,780
மாற்றல்கள்	-	-	-	-	422,037	- -	- -	- -	- -	- -	422,037 -
ஏனையவை மீண்டுவரும்செலவுகள்.			-		-	-	-	-	-	-	
ஏனையவை	215,700,000	2,470,000	(3,424,000)	214,746,000	199,158,771	226,800,000	6,888,600	-	233,688,600	115,091,623	314,250,394

செலவினம்	நிகழ்ச்சித்திட்டம்(1)					நிகழ்ச்சித்திட்டம்(2)					மொத்தசெலவினம்
	ஏற்பாடு				செலவினம்	ஏற்பாடு				செலவினம்	
13.1	செயலிழந்த வைப்புக்களின் விற்பனை தொடர்டபில் நி.பி.571 இன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	√		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுப் பதிவேடானது இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.	√		
14 முற்பணக் கணக்கு				
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியிலுள்ள காசேட்டு மீதியானது வுழுனு இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	√		
14.2	நி.பி.371 இன்படி வழங்கப்பட்ட உப கட்டுநிதியானது குறித்த பணியானது பூர்த்தியடைந்ததிலிருந்து ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.	√		
14.3	குறித்த தேவைக்காக உருவாக்கப்பட்ட உப முற்பணமானது நி.பி.371 இன்படி அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லையினை விஞ்சும் வகையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு இணக்கப்பாட்டு	தகைமை	(இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
14.4	முற்பணக் கணக்கு மீதியானது மாதாந்தம் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப் பட்டுள்ளன.	√		
15 வருமானக் கணக்கு				
15.1	ஒழுங்குவிதிகளின்படி, வருமானத்திலிருந்து மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	-	பொருத்தமற்றது	
15.2	வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது இறைவரிக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தன.	-	பொருத்தமற்றது	
15.3	நி.பி.176 இன்படி, வருமான நிலுவைகளின் மீளளிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன	-	பொருத்தமற்றது	
16 மனித வள முகாமைத்துவம்				
16.1	பதவியினருக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.	√		
16.2	பதவியணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன	√		
16.3	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இல. சுற்றிக்கையின்படி, அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு இணக்கப்பாட்டு	தகைமை	(இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
17. பொது மக்களுக்கான தகவல் வழங்கல்				
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான தகவல் பதிவேடும் பேணப்பட்டு வருவதுடன் அது தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குமைவாக இற்றைப் படுத்தப்பட்டும் வருகின்றது.	√		
17.2	பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணையதளம் அல்லது மாற்று வழிமுறைகள் மூலமாக அளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த இணையத் தளம் மற்றும் மாற்று வழிமுறைகளின் மூலம் பொதுமக்களுக்கெதிரான மெச்சுதல்கள் /குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	√		
17.3	தகவலறியும் சட்டத்தின் பிரிவுகள் 08 மற்றும் 10 இன்படி, டீ - வருடாந்த மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		
18. பிரஜைகள் பட்டயத்தினை செயற்படுத்துதல்				
18.1	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05.'.2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி, நிறுவனத்தினால் பிரஜைகள் சாசனம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனமானது வகுக்கப்பட்டு அமுல்படுத்தப் பட்டுள்ளது.	√		
18.2	சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்தியின்படி, பிரஜைகள் சாசனம; / பிரஜைகள் வாடிக்கையாளரின் சாசனத்தினை வகுத்தல் மற்றும் தயாரித்தல் நடவடிக்கைகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தினால் முறைமையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு இணக்கப்பாட்டு	தகைமை	(இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
19. மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்				
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இல.பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள வடிவத்தின் நியதிகளின்படி, மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.	√		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்தல் வேண்டும்.	√		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில், அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.	√		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கேற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியினை நியமித்தல்.	√		
20. கணக்காய்வு பந்திக்கான பொறுப்புக்கள்				
20.1	முன்னைய ஆண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல்	√		

கலாசார அலுவல்கள் பிரிவு

01 ஆம் அத்தியாயம் - நிறுவன சுயவிபரம் / அமுலாக்கத்தின் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையின் பாரம்பரிய மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளல், இலக்கியத்தையும் கலையையும் பேணி வளர்த்தல், தனித்துவமான ஒரு இலங்கை தேசத்தை உருவாக்குவதற்கான உன்னத பணிக்கு கலாசார அமைச்சு உறுதி பூண்டுள்ளது. இதற்காக கலாசார அமைச்சாகிய நாம் ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ எனும் தேசிய கொள்கைக்கு அமைய நிலையான அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு நற்குணங்கள் நிறைந்த மற்றும் உணர்திறன் வாய்ந்த மக்கள் நிறைந்த ஒரு நிலையான வளர்ச்சி அடைந்த இலங்கையில் காலடி எடுத்து வைப்பதற்குத் தேவையான பாரிய பங்கினை ஆற்றி வருகின்றது. இதற்கமைய 2021 ஆம் ஆண்டின் அமைச்சின் செயற்பாடுகளில் கலாசார அலுவல்கள் பிரிவின் செயல்த் திறன் இப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 நோக்கம், குறிக்கோள், செயற்பாடுகள்

நோக்கம்

ஒரு நிலையான வளர்ச்சியடைந்த இலங்கை

கலாசார அலுவல்கள் பிரிவு

குறிக்கோள்

கலாசார மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளை தளத்தில் மற்றும் வேறு இடத்திற்குக் கொண்டு சென்று பாதுகாத்தல் , திரைப்படம், நாடகமும் அரங்கியலும், கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா மரபுரிமைகள், அரச ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கைக்கே உரித்தான கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்தல், மேம்பாடு மற்றும் பிரச்சாரம் செய்வதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

செயற்பாடுகள்

ஒரு நாட்டினுடைய கலாசாரம் அந் நாட்டு மக்களை சுபீட்சமாக வாழ்வதற்காக அடையாளப்படுத்துகின்ற அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் மிகவும் பயனுள்ள முறையில் நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கின்ற மக்கள் நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற முக்கிய கருப்பொருளாக கருத்திற்கொண்டு எமது இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

- நாட்டின் பொதுவான தேசிய அபிவிருத்திக் கொள்கையை நிறைவேற்றச் செய்யக் கூடிய வகையில் மக்களை சுயமாக ஈடுபடுத்துகின்ற சாதகமான கலாசாரச் சூழலை நாட்டில் கட்டியெழுப்புதல்.

- இலங்கையின் பல்லினத் தன்மையை அங்கீகரித்து, ஒவ்வொரு உப கலாசாரங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்து, அனைத்து உப கலாசாரங்களும் ஒன்றாக இணைந்து இலங்கை என்ற மிகப் பெரிய கலாசாரத்தைக் கொண்ட நாடொன்றாக முன்னெடுத்துச் செல்வதும் பல்வேறு சக்திகள் மூலம் அழிந்துவருகின்ற சாதகமான கலை, கலாசார அம்சங்களை அவ்வாறான தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்.

- கலாசார மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாத்து, முன்னெடுத்துச் செல்வதும் அவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்வில் கலாசார மையம் நோக்கிய வாழ்வொன்றை திட்டமிடுதல்.

- சிறந்த கலை அம்சங்களை அறிந்துகொள்வதற்கும் அவற்றை தமது வாழ்வில் சேர்த்துக்கொள்வதற்கும் மக்களைத் தூண்டுதலும் அதன் மூலம் இலங்கை என்ற தனித்துவமுடைய கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

- கலாசார சீரழிவுக்குக் காரணமாக அமைகின்ற வெளிவாரி மற்றும் உள்வாரிக் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றை நிராகரித்தலும் இதற்கான தன்னம்பிக்கையை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தலும்.


- தேசப்பற்றுள்ள சிந்தனையை முன்வைத்து அபிவிருத்தி இலக்கை நிறைவேற்றக்கூடிய தன்னம்பிக்கையுள்ள கூட்டாக சக்தியுடையதாக சமூகத்தை உருவாக்குவதற்கான திட்டம்.

1.3 பிரதான கடமைகள்

- கலாசார அலுவல்கள் விடயத்திற்கு மற்றும் இவ் விடயத்தின் கீழ் இணைந்துள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் இதற்குரிய நடைமுறைப்படுத்தப்படக் கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்குரிய விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.
- இலங்கையின் தேசிய கலாசாரத்தின் எல்லா அம்சங்களையும் முன்னேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளை மேற்கொள்ளுதல்.
- கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகளின் பெருமை பிரபல்யமாகும் சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.
- சிங்கள கலைக்களஞ்சியம், சிங்கள அகராதி மற்றும் மகாவம்ச நூலை வகுத்தமைத்தல்.
- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில் கலாசார ரீதியிலான பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்கை இனமறிதலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- வரலாற்று ரீதியிலான தொல்பொருளியல் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நவீன அத்துடன் சம்பிரதாய ரீதியிலான கலை ஆக்கங்களை மேம்படுத்துவதற்கும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்குமுரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- நாடக, சங்கீத மற்றும் நடனத்துறைகளின் மேம்பாட்டுக்கான செயல்நெறிகளை இனமறிதலும் நடைமுறைப்படுத்தலும்.
- அரசாங்க ஆவணங்களை விதிமுறையாக முகாமை செய்தலும் பாதுகாத்தலும்.
- கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய நூதனசாலைகள் திணைக்களம், தேசிய சுவடிககாப்பகத் திணைக்களம், பகிரங்க தணிக்கைச் சபை, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், எஸ்.டப்.ஆர்.டி.பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம், ஜே.ஆர். ஜயவர்த்தன கேந்திர நிலையம் மற்றும் மத்திய கலாசார நிதியம், ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்தல்.

1.4


கலாசார அலுவல்கள் பிரிவு – அமைப்புத் திட்டம் - 2020
கௌரவ விடயதிற்குப் பொறுப்பான அமைச்சர்
அமைச்சின் செயலாளர்
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
மேலதிக செயலாளர் (மேம்பாடு / நிர்மாணிப்பு)
சி.உ.சே. (நிர்வாகம்)
பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(திட்டமிடல்)
பிபணிப்பாளர்
உள்ளகக் கணக்காய்வு
உதவிச் செயலாளர் (நிர்வாகம் /கூ.ம.நிர்வாகம் / போக்குவரத்து
உதவிச் செயலாளர் (வெளிநாடு)
கணக்காளர் (கொடுப்பவு)
உதவிச் செயலாளர் (மேம்பாடு)
உதவிச் செயலாளர் (நிர்மாணிப்பு)
பொறியியலாளர்
உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
ஒருங்கிணைப்பு செயலாளர்
மொழிபெயர்ப்பாளர்
நிர்வாக உத்தியோகத்தர்
கிளைத் தலைவர் உ.க.
கிளைத் தலைவர் நிர்வாகம்
கிளைத் தலைவர் கூ.ம.நிர்வாகம்
கிளைத் தலைவர் போக்குவரத்து
கிளைத் தலைவர் வெளிநாடு
கிளைத் தலைவர் கணக்குகள்
கிளைத் தலைவர் கோவை மறு
கிளைத் தலைவர் நிர்மாணிப்பு
கிளைத் தலைவர் நிர்மாணிப்பு
கிளைத் தலைவர் திட்டமிடல்
அலுவலகப்பாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அலுவலர்
முகாமைத்துவ உத்தியோகத்தர்
உ.கு.மே.உத்தியோகத்தர்
சாரதி

1.5 அமைச்சின் கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் இயங்கிவருகின்ற திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

I.  கலாசார அலுவல்கள் திணைக்களம்

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக அபிவிருத்தியடைந்த உணர்வுப்பூர்வமான மனிதர்களாக மாற்றியமைக்கும் ஒரே எதிர்பார்ப்பை நிறைவு செய்துகொள்வதற்காக இலங்கைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன், இலங்கைத் தனித்துவத்தைக் கொண்ட கலை, இலக்கிய மற்றும் கலாசார நடவடிக்கைகளை பேணுதல், மேம்படுத்தல், விஸ்தரித்தலுக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவது இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

A. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள்

- தேசிய கலா பவனம் மற்றும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபம்.
- சுதந்திர சதுக்கம்
- மகாவம்ச தொகுப்பு அலுவலகம்
- அகராதி அலுவலகம்
- கலைக்களஞ்சிய அலுவலகம்
- கிராமிய இசைப் பாதுகாப்பு நிலையம்
- எதிரிவீர சரத்சந்திர நாடக பயிற்சிப் பாடசாலை
- வலிசிங்க ஹரிஸ்சந்திர நூதனசாலையும் கலாசார கேந்திர நிலையமும்.
- தேசிய கலைக் கேந்திர நிலையம் - கண்டி குண்டசாலை
- வட தென் நட்பு நிலையம் - மிஹிந்தலை
- புத்தகங்கள் களஞ்சியமும் புத்தகங்கள் விற்பனையும்
- அரச நடனக் குழு மற்றும் அரச சங்கீதக் குழு

இத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகள்.

- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் அரச விழாக்கள்/ உற்சவங்களை ஏற்பாடு செய்தல், கலைஞர்கள் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- அலுவலக சேவையணியினர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

II. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

1877 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இந்தத் திணைக்களமானது வளமான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் கலாசாரம் மற்றும் இயற்கைப் பாரம்பரியத்திற்கு உரிய வளங்கள் அறிவு பூர்வமாக மற்றும் விதிமுறைகளுக்கு அமைய பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் மதிப்பீட்டுக் கற்கை மற்றும் இரசனைக்காக முன்வைத்தல் என்பன தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய நூதனசாலைகள் (10)
- மானிடவியல்ப் பிரிவு
- மானிட வரலாற்று விஞ்ஞானப் பிரிவு
- புவியியல்ப் பிரிவு
- விலங்கியல்ப் பிரிவு
- நுண்ணியல் பிரிவு
- தாவரவியல்ப் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு
- நூல்நிலையம்
- கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

III. தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்

கலாசார உரிமையின் ஒரு பகுதியாக அரசாங்க ஆவணங்களின் முறையான முகாமைத்துவம் மற்றும் பேணுகைக்காக தேசிய ஆவணக்காப்பக சட்டம் மற்றும் அது சம்பந்தப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல், நிரந்தர பேணுகைக்கு அரச ஆவணங்கள் மற்றும் முக்கியமான தனியார் ஆவணங்களை பெற்றுக் கொள்ளல், குறித்த சட்டங்கள், விதிகளுக்கு அமைய பாரம்பரிய மற்றும் பாரம்பரியமல்லாத அரச ஆவணங்களின் முகாமைத்துவம் மற்றும் பேணுகை, உரிய சட்டரீதியான வைப்புக்கு பத்திரிகை மற்றும் வெளியீடுகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல், அரசாங்க நிருவாக செயன்முறையின் போது மற்றும் மக்களின் ஆராய்ச்சிக்கான வைப்பு ஆவணங்களிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள வசதி செய்வது என்பன தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தின் பிரதான பிரவுகள்

- அரசாங்க ஆவணங்களை இணைத்தல்
- கண்காட்சி
- புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைப் பதிவு செய்தல்
- ஆவணங்களைப் பாதுகாத்தல்
- செய்தித்தாள் மைக்ரோ புகைப்படம் எடுத்தல்
- ஆவணக் கட்டடத்தின் விரிவாக்கம்
- ஆவண முகாமைத்துவ கருத்திட்டம்
- ஆராய்ச்சிப் பிரிவு
- பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

1.6 அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்கள் / நிதியங்கள்

I. பகிரங்க அரங்காற்றல் கட்டுப்பாட்டுச் சபை

இலங்கை சமூகத்திற்குத் தாக்கம் செலுத்துகின்ற பகிரங்க அரங்காட்டல் தொடர்பில் உள்நாட்டுத் திரைப்படம், நாடகம் மற்றும் சகல மக்கள் காட்சிப்படுத்தல்கள் ஆகிய விடயப்பரப்புக்கள் உள்ளடங்கும். இதன் போது மேற்படி விடயப்பரப்புக்கள் பகிரங்க அரங்காட்டற் சபை சட்டத்தின் கீழ் மக்கள் காட்சிக்கு உகந்ததா எனும் நோக்குக்கு அமைய பரிசீலிக்கப்படுகின்றது. அதற்கமைய பகிரங்க அரங்காட்டற் சபையினால் உகந்தவாறு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பரிசோதித்து வகைப்படுத்துவது இன்றைய பிரதான பணியாக குறிப்பிடப்படுகின்றது.

II. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

1980 இன் 45 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1971 இன் 47 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனமானது, இந்நாட்டின் சினிமாத்துறையின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கெனக் காணப்படுகின்ற ஒரே அரச நிறுவனமாகும். புதிய தொழில்நுட்ப முறையியல்களைப் பின்பற்றி திருப்திகரமான, பொறுப்புக்களை இனங்கண்ட, நட்புறவான சேவையை வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்து ஆக்கத்திறனுக்குத் தேவையான கல்வி, ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி வசதிகளைப் பெற்றுக் கொடுத்து தரமான சினிமா கலாசாரத்தை உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு

வருகின்றது. 1999.06.17 ஆம் திகதிய அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர், திரு டிக்சன் நிலவீரவினால் வெளியிடப்பட்ட தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது பற்றிய வழிகாட்டல்களின் மூலம் திரைப்படங்களை விநியோகிப்பதானது 05 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2021.12.31 ஆம் திகதியில் நாடு முழுவதிலும் 124 சினிமா திரையரங்குகள் இயங்கிவருகின்றன.

III. எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம்

காலம் சென்ற எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க அவர்களின் ஞாபகார்த்தமாக நினைவகத்தை என்றென்றும் நிலைநிறுத்துவதற்காக ''எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மண்டபம்'' ஆக அடித்தளமொன்று 1975 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அமைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இலக்கம் 02 குறிப்பிடப்படும் பாராளுமன்ற சட்டம் மற்றும் 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டின் திருத்தத்தின் மூலம் மண்டபம் செயற்படுத்தப்பட்டது. தெற்காசியாவில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள் மற்றும் கண்காட்சி மையமாக அமைப்பதற்கான தொலைநோக்குடன் கூடிய வர்த்தகப் பெயர், பௌதீக வளங்கள் மற்றும் மனித மூலதனத்தை புதிய முறையில் ஊக்குவிப்பதன் மூலம் நிறுவனத்தின் தனித்துவமான நிலையை பராமரிப்பதும் மேம்படுத்துவதும் இதன் முக்கிய பங்காகும். இதன் கீழ் மூன்று முக்கிய பிரிவுகள் செயற்படுகின்றன.

- எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் (BMICH) - 1976 ஆம் ஆண்டில் இணைந்திராத மாநாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் அனைத்து இனங்கள் மற்றும் சர்வதேச மாநாடு ஒன்றிற்காக வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமாக செயற்படுகிறது.
- பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகளுக்கான மத்திய நிலையம் - சர்வதேச உறவுகள் மற்றும் மொழிப் பாடநெறிகள் நடாத்தப்படும்.
- நூதனசாலை - எஸ்.டப்.ஆர்.டி.பண்டாரநாயக்க நூதனசாலை மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க நூதனசாலை .

IV. ஜே.ஆர் ஜயவர்த்தன கேந்திர நிலையம்

ஜே.ஆர் ஜயவர்த்தன கேந்திர நிலையம் இலங்கையின் முதல் நிர்வாகத் தலைவர் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தன ஜனாதிபதியின் கருத்துப்படி 1988 ஆம் ஆண்டு 77 ஆம் இலக்கம் குறிக்கும் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஒரு

சட்ட ரீதியான நிறுவனமாகும். இந் நிலையம் ஒரு நூல் நிலையம், ஒரு நூதனசாலை, ஜனாதிபதி காப்பகம் மற்றும் ஜப்பானிய அருங்காட்சியகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இங்கு திரு. ஜயவர்த்தன அவர்களின் தனிப்பட்ட நூல்நிலைய சேகரிப்பு மற்றும் அவரின் அரசியல் வாழ்க்கை தொடர்பான ஆவணங்கள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சில கடித ஆவணங்கள் மற்றும் அவர் ஆட்சிக் காலத்தில் பெற்ற பரிவு அருங்காட்சியகத்தின் பதிவுகளும் வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையம் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு வகையான சமூக சேவைகளை வழங்குகின்றது.

V. மத்திய கலாசார நிதியம்

இலங்கையின் மரபுரிமையை சர்வதேச விந்தையாக மாற்றியமைக்கும் பொருட்டு, தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவமிக்க உலக மரபுரிமைப் பிரதேசங்களிலுள்ள நினைவுச் சின்னங்களை தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் கண்காணிப்பின் கீழ் அகழ்வு செய்து பேணுவதும், மேற்படி தொல்பொருளியல் பிரதேசங்களில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு அதற்கான நிதியைச் சேகரிப்பதற்காக 1980 இன் 57 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் (மத்திய கலாசார) நிதியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.6 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள்

கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் கண்ணோட்டம்

கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களே கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்களாகும். இதன் கீழ் கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிற்கும் நாடக ஆய்வுக் கூடங்கள், நூல் நிலைய வசதிகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய அரங்கினை அமைக்கும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிற்கும் ''கலாசார மத்திய நிலையம்'' ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பாரம்பரியமான அவைக்காற்றுகைக் கலை மற்றும் பாரம்பரிய கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்து அதன் மூலம் வளர்க்கப்பட்ட கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் இக் கலாசாரக் கூறுகளைப் பொது மக்களிடம் கொண்டு செல்வதற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு முறையான பொறிமுறையாகும்.

கலாசார மத்திய நிலையங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

மாகாணம்	மாவட்டம்	பி.செ. பிரிவு	நிர்மாணிக்கப் பட்டு செயற்பட்டு வரும் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	திறந்து வைக்கப்பட உள்ள கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	நிர்மாணிக்கப் பட்டு வருகின்ற புதிய கலாசார மத்திய நிலையங்கள்	மேலும் நிர்மாணிக்ப்பட வேண்டிய கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை
மத்திய	கண்டி	20	14	-	01	05
	மாத்தளை	11	11	-	-	00
	நுவரெலியா	05	04	-	-	01
கிழக்கு	அம்பாறை	20	07	01	04	08
	மட்டக்களப்பு	14	04	02	-	08
	திருகோணமலை	11	06	-	-	05
வட மத்திய	அநுராதபுரம்	22	13	-	02	07
	பொலன்னறுவை	07	05	01	-	01
வடக்கு	யாழ்ப்பாணம்	15	08	02	-	05
	கிளிநொச்சி	04	-	-	-	04
	மன்னார்	05	-	-	-	05
	முல்லைத்தீவு	06	-	-	-	06
	வவுனியா	04	01	01	-	02
வட மேல்	குருநாகல்	30	18	05	01	06
	புத்தளம்	16	07	02	-	08
சப்ரகமுவ	கேகாலை	11	09	-	01	01
	இரத்தினபுரி	17	08	-	01	08
தெற்கு	காலி	19	14	-	01	04
	அம்பாந்தோட்டை	12	07	-	01	04
	மாத்தறை	16	17	-	-	00

ஊவா	பதுளை	15	13	-	-	02
	மொனராகலை	11	07	-	01	03
மேல்	கொழும்பு	13	07	-	-	06
	கம்பஹா	13	09	01	-	03
	களுத்துறை	14	12	-	01	01
	மொத்தம்	**331**	**201**	**15**	**15**	**122**

கலாசார மத்திய நிலையங்களினால் வழங்கப்படும் அடிப்படைச் சேவைகள்

பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்

வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு உயர்தரக் கலைப் படைப்புக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆய்வு மற்றும் பயிற்சிகளைப் பெறக் கூடிய நிறுவனக் கட்டமைப்பாக மாற்றும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 201 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே இசை வாத்தியத் திறன்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் எவரும் பங்கேற்கும் வகையில் கலாசார மத்திய நிலையங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. விசேடமாக நாட்டுப்புறவியல் பற்றிய தகவல் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்கான வாய்ப்பினை வழங்குவதுடன் இவற்றிற்கு மேலதிகமாக பின்வரும் பாடநெறிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- உடரட்ட, பஹத ரட்ட, சப்ரகமுவ, பரதம், கதக் மற்றும் கிராமிய நடன பாடநெறிகள்.
- மேலத்தேய இசை மற்றும் கீழத்தேய இசை பாடநெறிகள்.
- நாடகமும் அரங்கியலும் பாடநெறி.
- ஓவியம் சிற்பம் மற்றும் செதுக்குக் கலை பாடநெறி.
- ஜோதிட பாடநெறி.
- உடல் மற்றும் மன வளர்ச்சி பாடநெறி.
- கைப்பணி உற்பத்திகள், பற்றிக் தயாரிப்பு பாடநெறி.
- சிங்களம், தமிழ்,ஆங்கிலம், பாளி மற்றும் கலாசார மொழிகள் தொடர்பான பாடநெறிகள்.
- அங்கம்பொர கைவினைப் பாடநெறி.
- முஸ்லிம் ரபான் / கோலாட்ட நடனப் பாடநெறி.
- வெகுஜனத் தொடர்பு பாடநெறி.
- உள்நாட்டு கை வைத்திய பாடநெறி.
- சீன பாரம்பரிய தற்காப்புக் கலைப் பாடநெறி.
- அழகுக் கலை பாடநெறி.

நூலக சேவையினை வழங்குதல்

அனைத்து பிரதேச கலாசார மத்திய நிலையங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நூல் நிலையங்களின் மூலம் பாடசாலை மாணவர்களின் மற்றும் பிரதேச மக்களின் வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தை அதிகரித்தல் மற்றும் கல்வியை எளிதாக்கும் நோக்கத்துடன் இந்த சேவை செயல்ப்படுத்தப்படுகிறது. சில மத்திய நிலையங்களின் மூலம் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள கிராமப்புற சமூகங்களுக்கான நடமாடும் நூல் நிலைய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கலாசார சேவைகளை வழங்குதல்

பிரதேச மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சமய/ கலாசார விழாக்களின் தேவைகளுக்காக பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலம் கலாசார சேவைகள் வழங்கப்படுகின்றன. இதன் கீழ் ஜய மங்கள காத்தா குழுக்கள், ஹேவிசி குழுக்கள், மங்கள வாத்திய குழுக்கள், வெஸ் நடன குழுக்கள், நடன குழுக்கள், வீதி நாடகக் குழுக்கள் மற்றும் கிஹி பிரித் குழுக்கள் ஆகிய வசதிகளை வழங்குதல்.

சமய/ கலாசார/ கல்வி மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைத்தல்.

கலாசார மத்திய நிலையம் பிரதேச ரீதியாக வருடம் முழுவதும் பல்வேறு சமய/ கலாசார/ கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களது அபிவிருத்தி நிதியில் இருந்து/ பிரதேசத்தின் நிதி உதவியுடன்/ அரச பங்களிப்புடன் பிரதேச மக்களுக்காக நடாத்தப்படுகிறது.

கலாசார மத்திய நிலைய தேசிய நடனக் குழாமினை பராமரித்து வருதல்.

கலாசார மத்திய நிலையங்களில் நுண்கலைப் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களிடையே உயர் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ மாணவியர்கள் அடங்கிய நடனக் குழாம் பராமரிக்கப்பட்டுவருகிறது. அரச / தேசிய விழாக்களுக்காகவும் வெளிநாட்டு கலாசார சுற்றுலாவிற்காகவும் இவ் நடனக் குழாம் பங்களிப்புச் செய்கிறது.

2.1 கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

* 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 3021.08.30 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை முடிவு எண் iii இற்கு அமைய நிறுத்தி வைக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)

தொ. இல.	செலவு விடய விபரம்	2021 ஒதுக்கீடு ரூ.மி.	நிறுத்தி வைக்கப் பட்ட ஒதுக் கீடுகளின் அளவு (ரூ.மி.)	செலவு 2021.12.31 ஆம் திகதிக்கு ரூ.மி.	நிதி முன்னே ற்றம்
கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்ப்படுத்துதல்					
01.	கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல் 101-02-05-9-1409	60.00	-	28.14	47%
02.	கலாசார மத்திய நிலையங்களுக்காக பெர/ சங்கீத வாத்தியங்கள்/ மரத் தளபாடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல், மற்றும் நூல்நிலைய மேம்பாட்டிற்காக நூல்களைக் கொள்வனவு செய்தல். 101-02-05-0-2002	0.37	-	0.2	54%
03.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2102	5.00	-	5.00	100%
04.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர	8.00	-	8.00	100%

	உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2103				
05.	கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் 101-02-05-0-2001	6.00	-	6.00	100%
06.	கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு 101-02-05-23-2104	140.00	6.00	74.14 (கையில் உள்ள பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி ரூ.மி.37.00 ஆகும்.)	79%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மீண்டெழும்) செயல்ப்படுத்துதல்					
07.	சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் 101-2-5-6-1508	10.00	-	2.60	26%
08.	அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி) 101-2-5-8-1409	5.30	-	5.00	94%
09.	வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டம். 101-2-5-27-1409	12.64	2.5	7.02	56%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மூலதன) செயல்ப்படுத்துதல்					
10.	கைத்தொழில் கிராமங்களுக்கான நிகழ்ச்சித் திட்டம். 101-02-05-21-2506	2.00	-	1.63	82%
11.	கலாசார விழுமியங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான	2.00	1.00	0.00	0%

	ஆராய்ச்சி நடவடிக்கைகள். 101-02-05-29-2507				
12.	தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள். 101-02-05-31-2509	24.83	4.57	4.30	17%

2.1.1 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்
101-02-05-9-1409

கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூ.மி.60.00 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 201 கலாசார மத்திய நிலையங்களில் நுண்கலை மற்றும் திறன் விருத்திப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 5,000.00 மற்றும் ஏனைய பாடநெறிகளுக்காக ரூபா 4,750.00 ஆகவும் 2,330 வளவாளர்களுக்கு வளவாளர் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

2.1.2 கலாசார மத்திய நிலையங்களுக்காக பெர/சங்கீத வாத்தியங்கள்/மரத் தளபாடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல், மற்றும் நூல்நிலைய மேம்பாட்டிற்காக நூல்களைக் கொள்வனவு செய்தல்.
101-02-05-0-2002

கலாசார மத்திய நிலையங்களில் கல்விப் பாடநெறிகளுக்காக சங்கீத மற்றும் நடனப் பயிற்சிகளுக்கு வாத்தியக் கருவிகள் இன்றியமையாதவை என்பதால் கலாசார மத்திய நிலையங்களில் உள்ள திரும்பப் பாவனை செய்யக் கூடய பழுதடைந்த நிலையில் காணப்படும் சங்கீத மற்றும் நடன வாத்தியக் கருவிகளைப் புதுப்பிப்பதற்காக வருடந் தோறும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே கலாசார மத்திய நிலையங்களிற்காக பெர / சங்கீதக் கருவிகள் / மரத் தளபாடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல் மற்றும் நூல்நிலைய மேம்பாட்டிற்காக நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 0.20 மில்லியன் ரூபாவில் மிகஹகியுல, ஹாலிஅல, பலாகல மற்றும் கோனாபீனுவல ஆகிய 4 கலாசார மத்திய நிலையங்களிற்காக சங்கீதக் கருவிகள் மற்றும் நடன வாத்தியக் கருவிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2.1.3 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு.
101-02-05-0-2102

கலாசார மத்திய நிலைய கட்டமைப்பின் செயலூக்கப் பராமரிப்பிற்காக கலாசார மத்திய நிலையங்களுக்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 5.00 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் ஒதுக்கீடுகள் ரிதிகம, மாவத்தகம, மாதம்பே, மஹகும்புக்கடவல, மதுராவல, பாலிந்தநுவர மற்றும் புலத்சிங்கள ஆகிய கலாசார

மத்திய நிலையங்களிற்குத் தேவையான புத்தகங்கள், நடன ∴ இசைக் கருவிகள் மற்றும் அலுவலக தளபாடங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.1.4 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு.
101-02-05-0-2103

கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் அளவு ரூபா 8.00 மில்லியன் ஆகும். இந் நிதியினைச் செலவு செய்வதற்காக மாவத்தகம, அகட்டுவெவ மற்றும் பாலிந்த நுவர ஆகிய கலாசார மத்திய நிலையங்களுக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள், இசைக் கருவிகள், கணணி உபகரணங்கள் மற்றும் நடன உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், களனி நாகாநந்த சர்வதேச பௌத்த மத்திய நிலையத்திற்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் சங்கீத மற்றும் நடன உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.1.5 கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள்
101-02-05-0-2001

இதன் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள பத்தேகம, அல்பிட்டிய, பிட்டபெத்தர, தணமல்வில, மீகஹகிவுல, திறப்பனை, கெக்கிராவ, ஹிங்குராங்கொட, பாதுக்க, பொல்கஹவெல, அம்பன்பொல, கந்தளாய், தெஹியத்தகண்டிய, பதியதலாவ மற்றும் உக்குவெல ஆகிய கலாசார மத்திய நிலையங்களுக்காக 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 6.00 மில்லியன் நிதியினைப் பயன்படுத்தி சிறிய புதுப்பித்தல் வேலைகள், நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

2.1.6 கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல்.
101-02-05-23-2104

கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு - 2021பௌதீக முன்னேற்றம் 2021.12.31 ஆம் திகதிக்கு

2021.12.31 ஆம் திகதிக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	201
2021.12.31 ஆம் திகதிக்கு நிர்மாணிப்பு முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ள புதிய கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	15
2021.12.31 ஆம் திகதிக்கு நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	13
2021 ஆம் ஆண்டில் சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்பாட்டு வேலைகள் பராமரிப்பு வேலைகள் நடைபெற்றுவரும் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை	15

2.1.7 சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
101-2-5-6-1508

இதன் கீழ் கண்டி தலதா பெரஹரவிற்கு உதவிகளை வழங்குவதோடு மாத்தளை மற்றும் நுரரெலியா தேவாலயங்களுக்கு பெரஹரவிற்காக உரிய மாவட்ட செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஹுணுப்பிட்டிய கங்காராம பெரஹரவிற்கு நடனக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டதுடன் புத்தாண்டு சுப நேர அட்டையினை அச்சடித்து விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்றது.

2.1.8 அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி)
101-2-5-8-1409

அரச ஊழியர்களின் ஆக்கத்துவமான கலை திறன்களை மதிப்பிடுவதற்காக அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி வருடம் தோறும் ஏற்பாடு செய்யப்படுகிறது. தற்போது வரை அனைத்து போட்டிப் பிரிவுகளுக்கு (குறு நாடகம், குறுந் திரைப்படம், புகைப்படப் போட்டி மற்றும் கண்காட்சி போன்றவை) உரிய ஆக்கங்கள் கோரப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் ஆக்கங்கள் மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டு வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான விருது வழங்கல் விழாவினை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2.1.9 வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
101-2-5-27-1409

கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கலாசார உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் துறையுடன் இணைந்து உள்ளூர் கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட "Cultural Saubhagya" சர்வதேச கலாசார கச்சேரிக்கான முதற் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக தேசிய நடனக் குழு கலைஞர்களின் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பத்தரமுல்லையில் உள்ள "அபே கம" வளாகத்தில் இப் பயிற்சிகளை நடாத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2.1.10 கைத்தொழில் கிராமங்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
101-02-05-21-2506

சுற்றுலாத் துறையின் மூலம் உள்ளூர் கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பாரம்பரிய கலை மற்றும் கைவினைகளின் மாதிரிக் கிராமமான ஹாலி – எல கந்தானை சுற்றுலா கைத்தொழில் கலை கிராமத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 2.00 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா கண்காட்சி இடத்தை விரிவுபடுத்தும் வகையில் இந்த மாதிரி கலை கிராமத்தின் முதற் கட்ட நிர்மாணிப்புப் பணிகளுடன் தொடர்புடைய கிராமத்து வீட்டு பந்தல், மட்பாண்டத் தொழில், மீன்பிடித் தொழில், சுரங்கத் தொழில், செக்குத் தொழில் மற்றும் அம்பலம் தொடர்பான நிர்மாணிப்புப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இரண்டாம் கட்ட நிர்மாணிப்புப் பணிகளுக்கு மாவட்ட செயலகங்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

2.1.11 கலாசார விழுமியங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள்.
101-02-05-29-2507

உள்ளூர் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் கலாசாரம் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் தற்போது ஆய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்துடன் இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் திட்டம் இடப்பட்டுள்ளன. இந்த ஆய்வு நடவடிக்கைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட வினாக் கொத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கலாசார மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 2.00 மில்லியன் ஆகும். தற்போது உள்ள கொவிட் தொற்று நோய் காரணமாக கள ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதை தாமதப்படுத்தி உள்ளது.

2.1.12 தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
101-02-05-31-2509

இந்தத் தலைப்பின் கீழ் முக்கியமாக தேசிய நடனக் குழுவினை நிறுவுதல் மற்றும் "பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **தேசிய நடனக் குழுவினை நிறுவுதல்.**

கலாசார அலுவல்கள் பிரிவுடன் இணைந்து மாகாண மட்டத்தில் திறமையைக் காட்டும் வளரும் கலைஞர்களைத் தெரிவு செய்து நடனக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் மற்றும் சர்வதேச காட்சி வாய்ப்புக்கள் மூலம் இவ் வளரும் கலைஞர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அனுபவத்தை வழங்குதல் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் சுற்றுலாத் துறையுடன் இணைந்து மேடைக் காட்சிகளை வழங்குவதற்கும் வாய்ப்புகள் அவர்களுக்கு உள்ளது.

- **"பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல்.**

பாரம்பரிய நடனக் கலைகளை நவீன தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் மெல்ல மெல்ல மறைந்து வருகின்ற உடரட்ட, பகத்தரட்ட மற்றும் சபரகமுவ நடன மரபுகளை நவீன மாணவர் சமூகத்திற்கு புதிய முறையில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையில் நடாத்தப்படும் ''பிரதிபா'' கலாசார மத்திய நிலைய போட்டியினை அறிமுகப்படுத்தலாம். ஆண்டு தோறும் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் பாரம்பரிய நடனக் கலையை ஊக்குவிப்பதும் பிரச்சாரம் செய்வதும் ஆகும். தற்போது ''பிரதிபா'' கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலா போட்டியானது மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டு நிறைவடைந்துள்ளது.

2.2 அமைச்சின் கீழ் நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ளும் சட்ட ரீதியான அமைப்புக்கள்.

3 * 21/1596/304/134 மற்றும் 2021.08.30 ஆம் திகதியிட்ட அமைச்சரவை முடிவு இலக்கம் iii இற்கு அமைய நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)

	நிறுவனங்கள்	மூலதன ஒதுக்கீடு 2021 ரூ.மி.	*நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	செலவு 2021.12.31 இற்கு ரூ.மி.	நிதி முன்னேற்றம் %
01	பகிரங்க தணிக்கைச் சபை	4.35	-	0.50	11.5%
02	இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்	40.00	-	11.00	27.5%

2.2.01 பகிரங்க தணிக்கைச் சபை

2021.12.31 ஆம் திகதியின் போது புதிய திரையரங்கின் லொபிக்காக 09 சோபா செட் மற்றும் 02 ஸ்ரூல்களைக் கொள்வனவு செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

2.2.02 இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

- திரையரங்கில் ஒலிப் பலகைகளை பொருத்துவதற்குத் தேவையான அலபாமா துணி / LED மின்குமிழ் மற்றும் சுகாதரப் பொருட்கள் பெறப்பட்டுள்ளன. Color Grading Workstation and Monitor, Color Grading Software Suite and Device at Sarasavi studio, 4K புரஜெக்டரை திருத்தம் செய்தல் / 4K Projector கொள்வனவு Filter Fan மற்றும் Survey அமைத்தல் / Waterproofing of Roof Slabs at NFC Cinema, Supplying a Digital Hand held sound recorder and microphone ஆகிய விடயங்களுக்காக கொள்வனவு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
- Color Grading monitor and screen calibration tool, DCP Creator Sooftware / பல்கலைக்கழக ஸ்ரூடியோவில் உள்ள உரையாடலைப் பதிவு செய்யும் ஸ்ரூடியோ மற்றும் மேலதிக ஒலிப்பதிவு ஸ்ரூடியோவிற்கான ஒலிப் பேனல்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஒலி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் / பொதுமக்கள் அழைப்பு அமைப்பை நிறுவுவதற்கான திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளதுடன் ஒலி அமைப்பினை சேவிஸ் செய்தல் மற்றும் திருத்த வேலைகளை முடித்தல் பற்றிய ஆலோசனை அறிக்கை வர உள்ளது.

2.3. விசேட சாதனைகள்

- **இலங்கையின் பாரம்பரிய கைவினைஞர்களினால் உருவாக்கப்பட்ட "தும்பர ரட்டா கலால" கண்ணுக்குப் புலப்படாத உலக பாரம்பரிய தளங்களாக மாற்றுதல்.**

இலங்கையை பல்வேறு கட்புலனாகா மரபுகள் நிறைந்த நாடாக அடையாளப்படுத்த முடியும். இவற்றில் பொம்மலாட்டம் தற்போது யுனெஸ்கோவின்

உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 முதல் 18 வரை பிரான்சின் பாரிஸ் நகரில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் நடைபெற்ற கட்புலனாகா பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான 16 ஆவது சர்வதேச மாநாடு அத்தகைய மற்றுமொரு கட்புலனாகா பாரம்பரியத்தை இலங்கையின் ''தும்பரா ரட்டா கலாக'' ஒரு கட்புலனாக உலக பாரம்பரியமாக அறிவித்துள்ளது.

- **அமரதேவ இசை மடத்தினை நிறுவுதல்**

இசைத் துறைக்குத் தனித்துவமான பங்களிப்பை வழங்கிய மகா காந்தர்வ பண்டிதர் டபிள்யூ அமரதேவ ஷூரின் நினைவாக நிர்மாணிக்கப்பட்டு வரும் இவ் இசை மடத்தின் செயற்பாடுகள் பத்தரமுல்லையில் உள்ள எமது கிராமம் (அப்பே கம) வளாகத்தில் ஒதுக்கப்பட்ட 100 பேர்ச் காணியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இங்கு அழகியல் ஆய்வு கூடம், ஆவணக் காப்பகம், நூலகம் மற்றும் அமரதேவ அவர்களினால் பயன்படுத்திய விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் இவரினால் பயன்படுத்திய பொருட்களைப் பாதுகாத்து அவற்றினை எதிர்கால சந்ததியினருக்குக் கொண்டு செல்வதற்காக நூதனசாலையையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியினை நடாத்துதல்**

கொவிட் தொற்று நோய் இருந்த போதிலும் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டி – 2021 இற்காக ஆக்கங்கள் கோரப்பட்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட்டு வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. 2022 மார்ச் மாதத்தில் இதற்கான விருது வழங்கும் விழாவை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **''பிரதிபா'' கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல்.**

தற்போதய கொவிட் தொற்று நோய் இருந்த போதிலும் 2021 ''பிரதிபா'' கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டிகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.

- **''கலாசார ஞானம்'' பயிற்சிப் பட்டறையை நடாத்துதல்.**

இந்த ''கலாசார ஞானம்'' பயிற்சிப் பட்டறையை மூன்று கட்டங்களாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலையத்திற்குப் பொறுப்பான கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்காக கலாசார மத்திய நிலையங்களுக்களில் 2022 ஆம் ஆண்டில் செயல்த் திட்டத்தை உருவாக்குதல் தொடர்பாகவும் மற்றும் புதிய நிலையத்திற்குப் பொறுப்பான கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்காக கலாசார மத்திய நிலையம் தொடர்பான புரிந்துணர்வினை வழங்குவதற்கும் இந்தப் பயிற்சித் திட்டத்தினால் முடிந்துள்ளது. இங்கு கலாசார மத்திய நிலையங்கள் மூலம் திறமையான மற்றும் பயனுள்ள சேவையினை வழங்குவதற்குத் தேவையான அடித்தளம் அமைப்பதே இதன் நோக்கம் ஆகும்.

- **"தேசிய கலாசாரக் கொள்கை" உருவாக்கம்**

தேசிய ரீதியில் செயற்படும் கலாசார செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் தரமான மற்றும் ஒரு அளவு சார்ந்த மேம்பாட்டினை உருவாக்குவதற்கும் தேசிய கலாசாரக் கொள்கை அவசியமாகும். இதனை நோக்கமாகக் கொண்டு "தேசிய கலாசாரக் கொள்கை" உருவாக்குவதற்கான முதற் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நிபுணர் குழுவின் ஆலோசனையின் பெயரில் இது செயல்ப்படுத்தப்படுகிறது. இக் குழுவின் பரிந்துரையின் படி தற்போது முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

2.5 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

	சவால்கள்	எதிர்கால இலக்குகள்
1.	பிரதேச ரீதியாக நாடு முழுவதும் செயற்பட்டு வரும் கலாசார நடவடிக்கைகளை முறையாகவும் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் நடைமுறைப்படுத்துதல்.	• பிரதேச ரீதியாக செயற்பட்டு வரும் கலாசார நடவடிக்கைகளை ஒழுங்கிணைப்பதற்காக அரச நிறுவனங்களை சீரமைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குதல்.
2.	சர்வதேச அறிவு மற்றும் அனுபவத்தினைச் சேர்ப்பதன் மூலம் உள்ளூர்க் கலைத் துறையில் ஒரு தரமான வளர்ச்சியை உருவாக்குதல்.	• வெளிநாட்டு நாடக ஆசிரியரின் பங்கேற்புடன் உள்ளூர் நாடக ஆசிரியர்களுக்கு நாடகப் பட்டறையை ஏற்பாடு செய்தல் மற்றும் அவர்களுக்கு நாடகங்களைத் தயாரிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
3.	உள்ளூர் கலாசாரம் மற்றும் கலைக் கூறுகளை சுற்றுலாத் துறையுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் உள்ளூர்க் கலையை மேம்படுத்துதல்.	• முகமூடி, சிற்பங்கள் போன்ற ஒரு சுற்றுலாத் தலத்துடன் கூடிய படைப்புக்களுக்கு அரச அனுசரணைகளை வழங்குதல். • வெளிநாட்டவர்களுக்காக பெர வாத்திய பயிற்சி நிகழ்ச்சியை நடாத்துதல். • சுற்றுலா மேம்பாட்டிற்காக உள்ளூர் நடனங்கள், நாடகங்கள் போன்ற பாரம்பரியக் கலை வடிவங்களைப் பயன்படுத்துதல். • சுற்றுலாத் துறையை இலக்காகக் கொண்டு தேசிய நிகழ்ச்சித் திட்டமாக கொழும்பு நகருடன் இணைந்து சர்வதேச கலை விழாவை ஏற்பாடு செய்தல். • ஆண்டு தோறும் சர்வதேச சித்திரக் கண்காட்சியை ஏற்பாடு செய்தல்.
4.	உள்ளூர் கலாசார அலுவல்கள் தொடர்பான நிர்வாகக் கட்டமைப்பினை மறுசீரமைப்புச் செய்தல்.	• கலாசார மத்திய நிலையங்களில் நிர்வாக, நிதி மற்றும் கலாசார செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பிற்காக கணினி மென்பொருளை அறிமுகம் செய்தல். • ஒரு புதிய கலாசாரக் கொள்கை மற்றும் செயல்த் திட்டத்தை உருவாக்குதல். • கலாசாரத் துறையுடன் தொடர்புடைய நிறுவனக் கட்டமைப்பினை சீர்திருத்தம் செய்தல்.

		• கலாசாரத் துறையுடன் தொடர்புடைய சட்டங்கள், அரசியல் அமைப்புக்கள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் புதுப்பித்தல். • கலாசாரத் துறையுடன் தொடர்புடைய வரிக் கொள்கைகளை விசாரணை செய்தல்.
5.	உள்ளூர் கலாசார கலைகளின் நுகர்வு ஒழுங்குமுறை மற்றும் சம்பிரதாயத்தை மேம்படுத்துதல்.	• கலாசார கலைகளின் நுகர்வினை அதிகரிப்பது குறித்த ஆய்வினை நடாத்துதல். • இலக்கியம் மற்றும் கலைத் துறை தொடர்பாக பாடசாலை பாடப் புத்தகங்களைப் புதுப்பிப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குதல்.
6.	அடையாளம் காணப்பட்ட உள்ளூர் பாரம்பரிய கலாசாரக் கூறுகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அரச அனுசரணையை வழங்குதல்.	• கலாசார மத்திய நிலையங்களின் மூலம் ஆலயங்கள் தொடர்பான சடங்குகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அனுமதிப் பத்திரத்தை வழங்குதல்.
7.	உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உயர் கலைப் படைப்புக்களை உள்ளூரில் கண்காட்சிப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதன் மூலம் மேடை நாடகத் துறையில் தரமான மற்றும் அளவு ரீதியான வளர்ச்சியை உருவாக்குதல்.	• தேர்ந்து எடுக்கப்பட்ட மாவட்டங்களில் பிரதேச ரீதியாக செயற்பட்டு வரும் திரை அரங்குகளைப் புதுப்பித்தல்.
8.	கலாசார மத்திய நிலையங்களின் மூலம் உருவாக்கப்பட்ட உயர்தர கலைப் படைப்புக்களுக்கான கண்காட்சி வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.	• கலாசார மத்திய நிலையங்களின் மூலம் குறுநாடகங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றைத் திரையிடல். • கலாசார மத்திய நிலையங்களின் மூலம் உருவாக்கப்பட்ட உள்ளூர் பாரம்பரிய கலைப் படைப்புகளை நகர்ப்புற இடத்தில் கண்காட்சிப் படுத்துதல்.
9.	இலங்கை மக்களின் கலாசார இரசனையை மேம்பபடுத்துதல் மற்றும் பரந்த கலாசாரம் கொண்ட மனிதர்களை உருவாக்குவதற்கும் பாரம்பரிய கலை மரபுகள் மூலம் இசைத் துறையில் புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.	• ஒபேரா, பலே, இசை சிம்பொனிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் போன்ற புதிய கலை மரபுகளை அறிமுகம் செய்தல்.
10.	வாசகர்களின் தேவைகளப் பூர்த்தி செய்யும் வகையில் நூல் வடிவமைப்புத் துறையில் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி அந்தத் துறையில் தரமான வளர்ச்சியை ஏற்படுத்துதல்.	• பார்வையற்ற சமூகத்தினருக்கான ஆடியோ – கேட்டல் நூல்களைத் தயாரித்தல்.
11.	வாசிப்பு ஆர்வத்தை அதிகரித்து புத்தகம் எழுதும் துறையில் புதிய எழுச்சியை ஏற்படுத்துதல்.	• மாகாண புத்தக கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.

மேலே உள்ள பக்க எண் 83 முதல் 105 வரை கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சரிபார்க்கப்பட்டு, அந்தப் புள்ளி விபரங்களுடன் ஒத்துப்போகின்றன என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

.....

பிரதான கணக்கியல் உத்தியோகத்தர்

பெயர் - தேசபந்து பேராசிரியர் கபில குணவர்த்தன

பதவி - செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

திகதி - 2022.02.24

அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுறும் வருடத்திற்கான வருடாந்த ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை.

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று **ஏசீஏ – எப்**

2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற காலத்திற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

உண்மையான ரூபா

வரவு செலவு 2021		குறிப்பு	2021	2020	
	வருமான பெறுகைகள்				
	வருமான வரி	**1**	-	-	
	உள்ளூர் பொருட்கள் சேவைகளுக்கான வரி	**2**	-	-	**ஏசீஏ -1**
	சர்வதேச வர்த்தகம் மிதமான வரி	**3**	-	-	
	வரியில்லா வருமானம் மற்றும் பிற	**4**	-	-	
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
	வருமானமல்லாத பெறுகைகள்				
	திறைசேரி முற்பணம்		720,024,000	877,424,000	**ஏசீஏ 3**
	வைப்புகள்		5,581,725	5,462,163	**ஏசீஏ -4**
	முற்பணக் கணக்குகள்		34,564,048	10,813,436	**ஏசீஏ - 5/5(ஏ)**
	வேறு பெறுகைகள்				
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**760,169,773**	**893,699,599**	
	மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ= (அ)+(ஆ)		**760,169,773**	**893,699,599**	
	கழி : செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
580,600,000	வேதனாதிகள், சம்பளங்கள்,பிற ஊழிய நன்மைகள்	**5**	531,406,736	545,982,411	**ஏசீஏ - 2(ii)**
221,000,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	**6**	133,485,062	167,721,279	
149,600,000	உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	**7**	131,718,037	141,639,678	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	**9**	1,200	36300	
951,200,000	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)**		**796,611,035**	**855,379,667**	
	மூலதனச் செலவினம்				
12,650,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	**10**	8,896,434	18,502,697	
161,850,000	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்		96,358,800	78,939,018	
		11			
40,000,000	மூலதன மாற்றல்கள்	**12**	10,984,000	15,000,000	**ஏசீஏ - 2(ii)**
-	நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	**13**	-	-	
1,500,000	திறன் மேம்பாடு	**14**	614,658	616,387	
